RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 04 நவம்பர் 2022 இதழ்:- 28

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# இலங்கையில் அமெரிக்காவின் மனிதஉரிமைகள் பணிமனை!

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் ஆராயும் பணிமனை ஒன்றை அமைப்பது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளார் என்று அறிய வருகின்றது.(3ம் பக்கம் பார்க்க)



# பொறுத்தது போதும் என பொங்கி எழுந்த மக்கள்!



இலங்கையின் அரசியல் வரவாற்றிலே ஒரு முக்கியமான சம்பவம் ஒன்று 31 ஒக் 2022 யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றுள்ளது. அங்கே காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை (7ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிரான பேரணியை தடுத்து நிறுத்தியது பொலிஸ்!

பதற்றங்களுக்கு மத்தியிலும் சுமூகமாக போராட்டம் நிறைவு




அரசாங்கத்தின் அடக்குமுறைகளை கண்டித்தும் - எதிர்ப்பு தெரிவித்தும் 02 நவம்பர் 2022 கொழும்பில் நடத்தப்பட்ட மக்கள் பேரணி ரெக்னிக்கல் சந்திப் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டது.(5ம்பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence / Morningside

**Scarborough** **$499,800**
Bedrooms: 3 Washrooms: 2
Shops 24 Hours Bus Route


### Sheppard / Markham

**Scarborough** **$449,900**
Bedrooms: 2 Washrooms: 1
Beautiful Well Maintained Space

### Sheppard & Warden

**Scarborough** **$595,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony


### 401 & Mccowan

**Mississauga** **$599,900**
Bedrooms: 2 Washrooms: 2
Ttc Bus Within Walking Distance


### Warden & St Clair

**Scarborough** **$629,000**
Bedrooms: 2+1 Washrooms: 1
792 Sf Of Low-Rise Condo

### Markham & Eglinton

**Scarborough** **$699,999**
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Appliances

### John W Taylor / Ferris Lane

**New Tecumseth** **$839,000**
Bedrooms: 4 Washrooms: 3
Open Concept, H/Wood Floors

### Simcoe & Ritson

**Oshawa** **$850,000**
Bedrooms: 3+3 Washrooms: 2
Perfect For Investors

### Altona / Finch

**Pickering** **$979,000**
Bedrooms: 3 Washrooms: 4
Brand New Double Car Garage

### Harmony & Taunton


**Oshawa** **$1,224,888**
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Schools, Shop

### Donald Cousens & Hwy 7


**Markham** **$1,488,888**
Bedrooms: 4 Washrooms: 4
Less7 Yrs Old Beautiful 9Ft Ceilings

### Hwy 48/Castlemore


**Markham** **$3,600**
Bedrooms: 4 Washrooms: 3
Walking Distance To Go Train Station

### Hwy 7/Donald Cousens


**Markham** **$3,500**
Bedrooms: 4 Washrooms: 3
Approx. 2500 Sq Ft

### Church / Rossland


**Ajax** **$3,175**
Bedrooms: 4 Washrooms: 3
Family Friendly Neighbourhood

### Edenbrookhill / Sandalwood


**Brampton** **$1,800**
Bedrooms: 2 Washrooms: 1
Basement Apartment for Rent

### Markham Rd & 16th Ave


**Markham** **$2,500**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout; 9 Feet Ceiling

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கையில் அமெரிக்காவின் மனிதஉரிமைகள் பணிமனை!

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் ஆராயும் பணிமனை ஒன்றை அமைப்பது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளார் என்று அறிய வருகின்றது.



அமெரிக்க இராஜாங்கதிணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கு பொறுப்பான உதவி இராஜாங்கச்செயலாளர் டொனால்ட் லூ கடந்த 19ஆம் திகதி இலங்கை வந்திருந்தார்.

இதன் போது அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்க தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார் இதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

இலங்கையை மீட்க வந்த சிறந்த ஜனாதிபதி தற்போதே வந்துள்ளார் என்று டொனால்ட் லூ கூறினார் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் சர்வதேச ஊடகங்கள் இது தொடர்பில் முற்றிலும் மாறுபட்ட தகவல்களை வெளியிட்டுள்ளன. இதிலேயே, இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் ஆராயும் பணிமனை ஒன்றை அமைக்க டொனால்ட் லு கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 'ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' என்று டொனால்ட் லூ அரசாங்கத்தை வலியுறுத்தினார் என்றும் கூறப்படுகின்றது.

# ஈழத்தமிழருக்கு நடந்தது இனப்படுகொலையே! கனடாவின் பிரதான எதிர்கட்சி பகிரங்கக் குற்றச்சாட்டு



இலங்கையில் நடந்தது இனப்படுகொலை எனவும் போர்க்குற்றம் செய்ததற்காக இலங்கை அரசு தண்டிக்கப்படும் என்றும் கனடாவின் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் எதிர்க்கட்சித் தலைவரும், பழமை வாதக்கட்சியின் தலைவருமான **Pierre Poilievre** ஞாயிற்றுக்கிழமை (30.:.10.:.2022) கனடாவின் ரொறன்ரோ பெருநகர்ப் பகுதியின் முக்கிய நகரான மிசிசாகா நகருக்கு சென்றுள்ளார்.

இதன் போது ரொறன்ரோ பெருநகர்ப் பகுதியில் வாழும் கொன்சவேடிவ் கட்சியின் தமிழ் ஆதரவாளர்களை பிரத்தியேகமாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் கொன்சவேடிவ் கட்சி ஆட்சியில் **Pierre Poilievre** முன் வைக்கவிருக்கும் பல்வேறு நிலைப்பாடுகளை தெளிவாக்கும் வகையிலும் இந்த கலந்துரையாடல் அமைந்துள்ளது.

இதன் போது தமிழ் கனடியர்கள் ஒரு சமூகமாக எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் தமிழ் செயல்பாட்டாளர்களுடன் ஆராயப்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில், தற்போதைய லிபரல் அரசாங்கம் இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள், மற்றும் தாயகத்தில் வாழும் ஈழத்தமிழர்கள் நிலை என்பன தொடர்பில் காட்டி வரும் மேம்போக்கான நிலைப்பாடு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவற்றைச் செவிமடுத்த **Pierre Poilievre** எதிர்வரும் காலங்களில் அது குறித்து கொன்சவேடிவ் கட்சி செய்ய விருக்கும் எதிர்வினைகளை விளக்கியுள்ளார். அதன் பின்னர் கொன்சவேடிவ் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் தொண்டூழியர்களின் முன்னிலையில் **Pierre Poilievre** உரையாற்றியுள்ளார். உரையின் போது கனடாவின் பொருளாதாரத்தை சீர் செய்ய எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளில் சிலவற்றை பியர் விபரித்துள்ளார்.

மேலும் இலங்கை அரசின் நடவடிக்கைகள் குறித்தும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை அழுத்தமாகத் தெரிவித்த அவர், போர்க் குற்றம் செய்ததற்காக இலங்கை அரசு தண்டிக்கப்படும் என்றும் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது ஆட்சியின்போது முன்னாள் பிரதமர் **Stephen Harper** முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் **John Baird** ஆகியோர் இலங்கை சார்ந்த விடயங்களில் முன்னெடுத்த செயல்பாடுகளையொத்த அரசியல் நடவடிக்கைகளையே தானும் முன்னெடுக்கப் போவதை உறுதி செய்துள்ளார்.

இச்சந்திப்பின் போது அல்பேட்டா மாகாணத்தின் **Calgary Forest Lawn** தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், நிதி மற்றும் நடுத்தர வர்க்க செழிப்புக்கான நிழல் அமைச்சருமான **Jasraj Hallan** ஒன்ராறியோவின் **Flamborough Glanbrook** தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் **Dan Muys**, ஒன்ராறியோ தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், கொன்சவேடிவ் கட்சியின் துணைத் தலைவருமான ஆநடளைளய **Lants man** ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். மேலும் கொன்சவேடிவ் கட்சியின் தலைமைத்துவ தேர்தல் கால கட்டத்தில் இரவு பகல் பாராமல் அயராது உழைத்ததன் மூலம் 68.15% வாக்குகளை தனக்குப் பெற்றுக் கொடுத்து வெல்ல வைத்த தமிழ் தொண்டூழியர்களில் சிலரை **Pierre Poilievre** நேரில் சந்தித்து நன்றியும் தெரிவித்துள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# வடக்கில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முப்படையினர் மாத்திரமல்ல அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

போதை பொருள் பாவனையை கட்டுப் படுத்துவதற்கு முப்படையினரால் மாத்திரம் முடியாது அனைவரதும் ஒத்துழைப்பு தேவை என நீதி அமை ச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான நடமாடும் சேவை 31 ஒக்டோபர் 2022 திங்கட் கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக த்தில் ஆரம்பித்தது வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை நில் கடந்த 2 மாதத்திற்குள் யாழில் 508 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள் ளார்கள் வடக்கில் அதிகரித்துள்ள போதை பொருள் பாவனை கட்டுப்படுத் துவதற்கு முப்படையினரால் மாத்திர முடியாது அனைவரதும் ஒத்துழைப்பு தேவை தற்போது வடக்கில் ஒரு புதிய பிரச்சனை உருவாகி வருகிறது இலங்கை முழுவதும் இந்த போதைப் பொருள் பிரச்சனை ஒரு பெரிய பிரச்சி னையாக காணப்படுகின்றது ஆனால் வடபகுதியில் அது மிகவும் அதிகளவில் காணப்படுகிறது.

கடந்த 2 மாதத்திற்குள் 508 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் எதிர்கால இளை ஞர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் செயற்பாடு தொடர்பில் ஒரு பொறுப்பாக செயற்பட வேண்டியுள்ளது.

அந்த விடயத்தை தடுப்பதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தாக உள்ளது குறிப்பாக வடக்கு மாகா ணத்தில் இருந்த போதைப்பொருள் பாவனை மிக அதிக அளவில் காணப் படுகின்றது கடந்த ஒரு சில மாதங் களாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அதே போல் போதைப் பொருள்களுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் இது ஏனைய இடங்களோடு ஒப்பிடும் போது அதிகளவாக காணப்படுகின்றது இது ஒரு விபரீதமான ஒரு செயல்பாடாக காணப்படுகின்றது சிறுவர்களின் எதிர் காலத்தை பாழாக்கும் பாரதூரமான செயற்பாடாக காணப்படுகிறது.




அத்தோடு இந்த விடயம் போதைப் பொருள் வியாபாரிகளால் உருவாக்கப்படு கிற செயற்பாடாக காணப்படுகின்றது அதாவது குறிப்பாக யாழ் மாவட்டம் மிகவும் ஒரு பாதிப்பான நிலையில் காணப்படுகின்றது இந்த நாட்டின் பிரஜை என்ற ரீதியில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக நாங்கள் உடனடி யாக ஒரு நடவடிக்கை எடுக்க வேண் டும் குறிப்பாக முப்படையினர் பொலிசார் அனைவரையும் இணைத்து இதனை தடுப்பதற்கான நடவடிக்கை உடனே எடுப்பதற்கு நான் தயாராக உள்ளேன். இந்த போதைப் பொருள் பாவனை கட்டுப்படுத்துவதற்கு உபரியான செயற் பாட்டை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பில் நான் ஆராயவுள்ளேன் என்ற அவர் காணாமல் போனவர்கள் தொடர் பில் கிடைக்கப் பெற்றிருக்கும் முறைப் பாடுகள் தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் சில மாதங்களுக்குள் முடிவு க்கு கொண்டுவர முடியும்.

அத்துடன் வடமாகாண மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்ப ஷதற்காக விசேட இணக்கசபை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ் தெரிவித்தார்.

# கஜேந்திரன் மீது நடமாடும் சேவையை குழப்பியதாக சேவை பெற வந்தவர்கள் குற்றச்சாட்டு!

தமக்கான சேவையினை குழப்பும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் செ, கஜேந்திரன் தலைமையிலான குழு செயற்பட்டதாக சேவை பெற வந்தவர் கள் குற்றம் சாட்டியுள்ளனர். நீதி அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றில் குரல் கொடுக்க வேண்டிய நாடாளு மன்ற உறுப்பினர் மக்கள் சேவை நடை பெறும் இடத்தில் வந்து அதனை குழப்பும் முகமாக செயற்பட்டமை எமக்கான சேவைகளை தடுக்கும் நோக்கமாகவே நாம் கருதுகிறோம் என சேவை பெற வந்திருந்தவர் ஒருவர் தெரிவித்துள்ளார். காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு நீதி வேண்டும் அவர் களுக்கு என்ன நடந்தது என்பதனை வெளிப்படுத்த வேண்டும். இதில் எமக்கு எந்த மாற்று கருத்தும் கிடை யாது. எமது உறவினர்களிலும் காணா மல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளனர். அதற்காக அமைச்சர் இல்லாத இடத் தில் மக்கள் சேவை இடம் பெறும் இடத்தினுள் அத்துமீறி நுழைந்து அதனை குழப்பும் செயற்பாடாக நாடாளுமன்ற உறுப்பினர் நடந்து கொண்டமை கண்டனத்திற்கு உரிய தாகும். எமக்கான ஆவணங்களை பெறுவதற்கு நாம் கொழும்பு சொல்வ தாயின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சுமார் 15 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகும். இந்த நிலைமை யில், இந்த நடமாடும் சேவை ஊடாக இலகுவாக ஆவணங்களை பெற்றுக் கொள்ள முடியும் என இங்கே வந்திரு ந்த போது நாடாளுமன்ற உறுப்பினரின் தலைமையில் சிலர் இங்கு வந்து போரா ட்டம் செய்தனர். யாழ்ப்பாணம் மாவ ட்ட செயலகத்தில் நீதி மற்றும் சிறைச் சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசிய லமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஒழுங்கமைப்பில் கடந்த திங்கட்கிழமை நடமாடும் சேவை நடைபெற்ற நிலை யில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட் டனர். செயலகத்தின் முன்பாக போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் பின்னர் நாடா ளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உள்ளி ட்டவர்களுடன் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தினுள்ளும் நுழைந்து கோஷங்களை எழுப்பினர்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

5 நவம்பர் 2022 சனிக்கிழமை
சனிப்பிரதோஷ விரதம்

16 நவம்பர் 2022 புதன்கிழமை
ஐயப்பன் மண்டல பூஜை ஆரம்பம் .

ஐயப்பன் மாலை போட விரும்பும் ஐயப்ப பக்தர்கள், ஐயப்ப படிகட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# அரசுக்கு எதிரான பேரணியை தடுத்து நிறுத்தியது பொலிஸ்!

## பதற்றங்களுக்கு மத்தியிலும் சுமூகமாக போராட்டம் நிறைவு




அரசாங்கத்தின் அடக்குமுறைகளை கண்டித்தும் – எதிர்ப்பு தெரிவித்தும் 02 நவம்பர் 2022 கொழும்பில் நடத்தப்பட்ட மக்கள் பேரணி ரெக்னிக்கல் சந்திப் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டது. இதையடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டிருந்தது. எனினும், ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களின் தொடர் எதிர்ப்பையடுத்து பொலிஸார் வழி விடவே போராட்டம் திட்டமிட்டபடி கோட்டை ரயில்நிலையம் அருகே முடிவடைந்தது

20 அரசியல் கட்சிகள், 150இற்கும் மேற்பட்ட தொழில் சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று பெரும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தன.

### போராட்டம் ஆரம்பம்

மருதானை எல்பிஸ்டன் திரையரங்கம் அருகே போராட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமானது. இதில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர். அடக்குமுறையை நிறுத்து, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு என்று எழுதப்பட்ட பதாகையின் பின்னால் நீண்ட பேரணி ஆரம்பமானது. இதில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் தொழில்சங்க – பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். போராட்டத்தில் அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

### மனித அரண் அமைத்து தடுத்த பொலிஸார்

பேரணி நகர்ந்த நிலையில் புறக்கோட்டையின் மிதக்கும் சந்தைய ஒட்டி– ரெக்னிக்கல் சந்தியில் – பிரதான

வீதியை நடைபாதையுடன் சேர்த்தவாறு மனித அரண் அமைத்து ஆயிரக்கணக்கான பொலிஸார் நிறுத்தப்பட்டனர். அத்துடன், வன்முறை ஏற்பட்டால் அதை கலைக்கும் நோக்கில் தண்ணீர் தாரை செய்யும் வாகனம், கண்ணீர் புகைக் குண்டுகள், தடியடி நடத்துவதற்கான ஆயத்தங்களுடன் பொலிஸார் தயராகவும் இருந்தனர்.

பேரணி அந்த இடத்தை நெருக்கியதும் போராட்டக்காரர்கள் பொலிஸாரை கடந்து செல்ல முயன்றனர். அது முடியாத நிலையில், அரசியல்வாதிகளை அழைத்தனர். அரசியல்வாதிகளாலும் அது முடியாது போகவே, அவர்கள் தொடர்பில் அதிருப்தியை போராட்டத்தில் பங்கேற்றவர்கள் வெளியிடவே சஜித் உள்ளிட்ட அரசியல்வாதிகள் அங்கிருந்து வெளியேறினர்.

### தள்ளுமுள்ளில் ஈடுபட்ட பொலிஸ் – பேரணிக்காரர்

எனினும், போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாக அவ்விடத்தில் நின்று அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பியதுடன், ஒரு சாரார் பொலிஸாரின் மனித அரணை உடைக்கவும் முற்பட்டனர். எனினும் அது பலனளிக்கவில்லை.இதேபோன்று, பொலிஸாரும் பேரணியை பின்னகர்த்துவதற்கு முயன்றனர். ஒரு கட்டத்தில் போராட்டக்காரர்களை குறிப்பிட்டளவு தூரம் தள்ளிச் சென்றனர். எனினும், போராட்டக்காரர்கள் வலுப்பெறவே அது சாத்தியமில்லாது போனது. பின்னர் பொலிஸார் தாமாகவே வழியை திறந்து விடவே போராட்டம் கோட்டை ரயில் நிலையப் பகுதியான முடிவு இடத்தை நோக்கிச் சென்றது. இதைத் தொடர்ந்து மாலை 6.10 மணியளவில் போராட்டம் நிறைவுக்கு வந்தது. சஜித், தயாசிறி போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு கட்டத்தில் போராட்டத்திலிருந்து வெளியேறிய போதும், ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணித் தலைவி ஹிருணிகா பிறேமசந்திர, முஜி புர் ரஹ்மான போன்றவர்கள் இறுதிவரை போராட்ட இடத்தில் நின்றிருந்னர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டை மீண்டும் கைப்பற்றி பதவியேற்ற பின்ரே மேடையேறுவேன் - கோத்தபாய

முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை விட்டு வெளியேறிய அதிபராக தான் இருப்பதால், அதனை மீளக் கைப்பற்றி பதவியேற்ற பின்னரே அரசியல் மேடைகளில் ஏறுவதற்கு சபதம் எடுத்திருப்பதாக அவரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்கள். ஓடிப் போன அதிபராக கட்சியின் அரசியல் கூட்ட மேடைகளில் ஏற கோட்டாபய ராஜபக்ஷ மறுத்து வருவதாக சிங்களப் பத்திரிகை ஒன்றும் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ தற்போது கொழும்பிலுள்ள மலலசேகர மாவத்தையில் அவருக்கு வழங்கப்பட்ட புதிய அதிகாரபூர்வ இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். பொதுஜன பெரமுன கட்சியின் தொகுதிகளுக்கான கூட்டம் தொடங்கியதனையடுத்து, கோட்டாவுக்கு விசுவாசமான பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோட்டாவை கட்சியின் மேடைக்கு அழைக்க முன்வந்துள்ள போதிலும், கோட்டா அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். நாட்டை விட்டு வெளியேறிய அதிபராக தான் இருப்பதால், அதனை மீளக் கைப்பற்றி பதவியேற்ற பின்னரே அரசியல் மேடைகளில் ஏறுவதற்கு அவர் சபதம் எடுத்திருப்பதாக அவரைச் சந்தித்த பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். தற்போதுள்ள சூழ்நிலையில் பொது ஜன பெரமுனவின் மேடையில் ஏறினால் கட்சிக்கு எதிர்மறையான தாக்கத்தை கோட்டாபய ராஜபக்ஷ ஏற்படுத்துவார் என்ற கருத்து கட்சியின் உயா மட்டத்திலும் காணப்படுகின்றது. இதனால்தான் அவர் கட்சியின் மேடையில் அமர மறுத்து வருவதாக கட்சியின் முக்கிய தலைவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

# பலம் பொருந்திய நாடுகளை கையாளுதல்?

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் முயற்சிகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவுக்கு வெற்றியை தொடவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியாவும் சீனாவும் நிபந்தனைகளைவிதித்திருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் இது புதிய சவாலாகும். பொதுவாக இலங்கையில் ஜனாதிபதியாகத் தெரிவாகும் ஒருவர் முதன்முதலாக புதுடில்லிக்கு விஜயம் செய்வதுதான் வழமையானது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றதிலிருந்து இதுவரையில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவில்லை. இந்தியாவுக்கு விஜயம் செய்யும் முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்தார்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கிய போது உடனடியாக இந்தியாவே உதவி செய்திருந்தது. இந்தியாவின் உதவி கிடைக்காதிருந்தால் நாடு தற்போதுள்ள நிலைமையை விடவும் மோசமான நிலைமையை அடைந்திருக்கும். இதனை ரணில் விக்கிரமசிங்கவே குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், இந்தியா உதவி செய்யுமளவுக்கு கொழும்பின் நடவடிக்கைகள் திருப்தியாக இல்லையென்னும் அபிப்பிராயம் இந்திய அரசியல் அவதானிகள் மத்தியிலுண்டு.

குறிப்பாக, சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதித்த விடயத்தில் புதுடில்லி கடும் அதிருப்திக்கு உள்ளாகியது. இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்திலும் ஏற்படலாம் என்றவாறான அபிப்பிராயமே இந்திய அரசியல் அவதானிகள் மத்தியிலுண்டு.

இவ்வாறான சூழலில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கரிசனைகளையும் அதேவேளை ஏற்கனவே இலங்கைத்தீவுக்குள் காலூன்றியிருக்கும் சீனாவையும் சமவேளையில் சமாளிக்க வேண்டிய நிலைமையை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் எதிர்கொண்டிருக்கின்றது. இந்தியா, தேசிய பாதுகாப்பு என்னும் பெயரில் அனைத்து விடயங்களிலும் தலையீடு செய்வதான அபிப்பிராயங்கள் சிங்களதேசியவாத தரப்புக்கள் மத்தியிலுண்டு. ஆனால், இந்த விடயத்தை அவதானத்துடன் கையாள வேண்டும் இல்லாவிட்டால் நிலைமைகள் சிக்கலாகிவிடும் என்பதையும் கொழும்பின் வெளிவிவகார குழாம் புரிந்து கொள்ளாமல் இருக்காது.

ஆனால், எவ்வாறு இந்த நிலைமையை சமாளிப்பது என்பதுதான் அவர்களின் பிரச்னை. சிங்கள பௌத்த தேசியவாதிகளைப் பொறுத்தவரையில் இந்தியாவா அல்லது சீனாவா என்னும்போது அவர்கள் இதயத்தால் சீனாவையே சார்ந்திருக்கின்றனர். ஆனால், அச்சத்தின் காரணமாகவே இந்தியாவிலிருந்து அதிகம் விலகி விடக்கூடாதென்று எண்ணுகின்றனர்.

இதனை புதுடில்லி நன்கறியும். குறிப்பாக, இந்தியா ஒன்று தான் வடக்கு – கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் அரசியல் இருப்பை ஏற்றுக்கொள்ளும் ஒரேயொரு நாடாகும். ஆனால், இந்த விடயத்தில் இந்தியாவின் கரிசனையையும் ஈடுபாட்டையும் சிங்கள – பௌத்த தேசியவாதிகள் விரும்பவில்லை. அதனை அவர்கள் வெறுக்கின்றனர்.

அண்மையில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடரின்போது இந்தியாவின் நிலைப்பாட்டை சிங்கள பௌத்த தேசியவாதிகள் சகிக்கவில்லை. ஒரு சிங்கள ஆய்வாளர் இதனை, இந்தியா அதன் எதிரியை மீளவும் வரையறை செய்திருப்பதாகக் கூறுகின்றார். இது ஒருவரின் கருத்தல்ல. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

பொருளாதார நெருக்கடியானது இலங்கையின் நிலைமையை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றது. பலம் பொருந்திய நாடுகளை கையாளும் விடயத்தில் இலங்கையின் நிலைமையானது கிட்டத்தட்ட கயிற்றுக்கு மேல் நடக்கும் நிலைக்கு ஒப்பானது.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2022"

# விக்கி, ஆளுநர் முயற்சிகள் அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்தியது என்கிறார் நீதிஅமைச்சர்!



பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஆகியோரின் முயற்சிகள் சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையை துரிதப்படுத்துகிறது நீதி அமைச்சர் விஜயதாச ராயபக்ஷ தெரிவித்துள்ளார்.

30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகளை சந்தித்து கலந்துரையாடிய நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிறையில் நீண்ட கலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நீதியரசர் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தார்.

வட மாகாண ஆளுநரும் ஜனாதிபதியிடனும் என்னிடமும் தமிழ் அரசிகள் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்துவதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துமாறு கோரி இருந்தார்.

இவர்கள் இருவரினதும் முயற்சியும் நாட்டின் ஜனாதிபதியினுடைய ஆலோசனையும் குறுகிய காலத்தில் பல அரசியல் கைதிகளை விடுதலை செய்ய உதவியது.

நாட்டினுடைய நீதி அமைச்சர் என்ற வகையில் தமிழ் அரசிகள் கைதிகளின் விடுதலையை விரைவாக மேற்கொள்வதற்கான சட்ட நடைமுறைகளை பின்பற்றி வருகிறோம் எனத் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் கலந்து கொண்ட குரல் அற்றவர்களின் குரல் அமைப்பில் இணைப்பாளர் முருகையா கோமகன் நீதி அமைச்சரிடம் கோருகையில் தமிழ அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அந்த மகிழ்ச்சி தொடர்ந்து நீடிப்பதற்கு சிறையில் உள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விரைவாக விடுதலை செய்ய உதவ வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

அது மாத்திரம் இன்றி வட மாகாணத்தில் இருந்து போதைப் பொருள் கடத்துபவர்கள் அங்கிருந்து இலங்கையின் பிற மாகாணங்களுக்கும் போதைப் பொருள்களை எடுத்துச் செல்வதை அறிய முடிகிறது. எனவே இவற்றை கட்டுப்படுத்துவது அவசியம். இது தொடர்பாக வடமாகாண ஆளுநர், மாவட்ட செயலாளர்கள், பிரதம போலீஸ் அதிகாரிகள் முப்படை உறுப்பினர்கள் போன்றவர்களுடன் நாம் கலந்துரையாட தீர்மானித்துள்ளோம் என்றார்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca** மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

**அறிவித்தல்.**

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர்,தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர்,புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

நன்றி.

வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.

தொடர்பு இலக்கம்: 647 619 3619

**ctro@tamilremembrance.com.**

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# பொறுத்தது போதும் என பொங்கி எழுந்த மக்கள்!

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே ஒரு முக்கியமான சம்பவம் ஒன்று 31 ஒக் 2022 யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றுள்ளது. அங்கே காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை பலவந்தமாக வெளியேற்றியுள்ளனர். இதன் மூலம் இலங்கையின் நீதித்துறையால் தமக்கு ஏற்பட்ட பாதிப்பையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமாக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பல வருடங்களாகவே காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி அங்கலாய்த்தவர்களாக இருக்கின்றனர். சிலர் மன உளைச்சல் காரணமாக ஏக்கத்தினால் உயிரிழந்தனர். காணாமலாக்கப்பட்டோரின் வேறு சில உறவுகள் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை வரை சென்றுங் கூட காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் குறித்து பேரவை பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்திருந்திருந்தனர்.

வெறுமனே கண்துடைப்பாக ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் என்று ஆரம்பித்து காணாமலாக்கப்பட்டோரின் கண்ணீரில் கரைந்த கதைகளை அந்த ஆணைக் குழுக்கள் செவிமடுத்தனவே தவிர எவ்வித்திலும் நீதியான தீர்வுகள் பாதிக்கப்படடோருக்கு கிடைக்கவில்லை. காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நடத்தாத ஆர்ப்பாட்டங்களும் இல்லை. அவர்கள் ஏறி இறங்காத ஆணைக்குழுக்களும் அலுவலகங்களும் இல்லை. இத்தகைய பின்னணியிலேயே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாண செயலகத்திலிருந்து பாதிக்கப்பட்ட மக்களால் வெளியேற்றப்பட்டுள்ளார். நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு நடந்தது தென்னிலங் கையிலுள்ள ஏனைய அமைச்சர்களுக்கும் ஒரு நல்ல படிப்பினையாக அமையுமென்றே கருதலாம்.

ஏனெனில் சிலரை சில காலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது என்பது முதுமொழி. வடக்கு – கிழக்கு மக்கள் ஏற்கனவேஅரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக ஏமாந்து போயுள்ளனர். இது தவிர, பேரினவாதிகளின் பல தரப்பட்ட அநீதிகளாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய. பின்னணியிலேயே நீதி அமைச்சர் ஆழமறியாது காலைவிட்டு அவமானப்பட்டுள்ளார். விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவம் 'நீறு பூத்த நெருப்பின் மீது அவர் காலை வைத்தது போன்றே அமைந்திருந்தது.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மாத்திரமல்ல. யுத்தத்தால் அபலைகளான விதவைகள், அநாதைகள் அகதிகள் என்று ஏராளமானவர்கள் வடக்கு – கிழக்கில் இருந்து வருகின்றனர். முப்பது வருட கால யுத்தம் ஏற்படுத்திய வடுக்கள் சாமான்யமானவையல்ல. பரிதவித்து நிற்போரின் உணர்வுகளை நாடிபிடித்தறியாதவராக யாழ். மாவட்ட செயலகத்துக்கு வந்திருந்த நீதி அமைச்சருக்கு காணாமலாக்கப்பட்டோரின்

உறவுகள் தகுந்த பாடம் கற்பித்துள்ளனர் என்றே கருத முடியும். ஏனெனில், பரிதவித்து நிற்கும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தம்மவரைத் தேடித் தரும்படி கோரி வருகின்ற நிலையில் அவர்களுக்கு நட்ட ஈடாக இரண்டு இலட்சம் ரூபாயை வழங்குவதற்கு முன்வந்தமை கூட வெந்த புண்ணில் வேல் பாயச்சுவதாகவே அமைந்திருந்தது. காணாமலாக்கப்பட்டோரின் நிலவரம் மிகப்



பரிதாபகரமானது. ஏனெனில், காணாமல் ஆக்கப்பட்டவர்களால் பரிதவித்து நிற்கும் நிலை ஒரு புறமிருக்க, தமது வாழ்வாதாரத்தையும் பெற முடியாதவர்களாக பாதிப்புற்றோர் இருக்கின்றனர். ஏனெனில், காணாமல் ஆக்கப்பட்டவர், பாதிக்கப்பட்டோரின் குடும்பத் தலைவராக, சகோதரனாக, அல்லது பல்வேறு விதத்திலும் நம்பியிருந்த ஒருவராக இருக்க முடியும். அவர்கள் இன்று தமது உறவுகளோடு இருந்திருந்தால் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்ப சுமைகளை சுமந்திருக்கவும் முடியும். ஆனால், எத்தகைய துணையோ ஆதரவோ இன்றியிருக்கின்ற மக்களை பணத்தால் வருடி விட அரசதரப்பு முனைவது கவலைக்குரியதாகவே இருக்கின்றது. தற்போதைய தருணத்தில் பணத்தையோ அல்லது வேறு நஷ்ட ஈடுகளையோ வழங்குவதன் மூலம் அனைத்தையும் பூசிமெழுகி விடலாமென அரசு நினைப்பது ஒரு தப்புக் கணக்காகவே இருக்க முடியும். ஏனெனில், பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுவதெல்லாம் தம்மவர்களை கண்டறிந்து தரமுடியாவிடில் ஒரு சர்வதேச பொறிமுறையுடன்கூடிய நீதிவிசாரணையை மேற்கொண்டு தமக்கு நீதிவழங்கப்பட வேண்டுமென்பதேயாகும்.

இதன் வெளிப்பாடகவே யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூட விரட்டப்பட்டுள்ளார். தாம் முகங்கொடுக்க நேர்ந்த இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை ஓர் அவமானமாகக் கருதாது, பாதிக்கப்பட்ட மக்களின் நியாயமான உள்ளக் கிடக்கையின் வெளிப்பாடே என்பதை அறிந்து அந்த மக்களுக்கு நீதியை வழங்குவதே நீதி அமைச்சரின் நேர்த்தியான அணுகுமுறையாக அமைய முடியும். நன்றி– யாழ்.ஈழநாடு

# பொதுமன்னிப்பின் மறுபக்கம்:- அதிர்ச்சி தரும் சில உண்மைகள்

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் அண்மைக்காலத்தில் மீண்டும் பேசு பொருளாக இருக்கின்றது. அரசியல் கைதிகள் குறித்து கவனம் திரும்பி இருப்பதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம் தீபாவளி தினத்தை முன்னிட்டு எட்டு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு இருக்கின்றார்கள். ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கி இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று சொல்லப்பட்டது.

அதே வேளையில் மேலும் சில அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு தான் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்த பின்னணியில் கைதிகளின் நிலைமை குறித்து மக்களுடைய கவனம் திரும்பி இருக்கின்றது. அதேவேளையில், இதன் பின்னணியில் மறைக்கப்படும் சில உண்மைகளையும் நாம் வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

சாதாரண கைதிகளுக்கும் அரசியல் கைதிகளுக்கும் முக்கியமான சில வித்தியாசங்கள் இருக்கின்றன. அரசியல் கைதிகள் எனப்படுபவர் அரசியல் நோக்கத்திற்காக அதாவது மக்களுக்காக ஏதாவது செய்யப் போய் அதற்காக கைதாகி அரசாங்கத்தினால் சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்கள். ஏனைய கைதிகளை பொறுத்தவரையில் அவர்கள் தங்களுடைய நலன் சார்ந்து செய்த குற்றங்களுக்காக சிறையில் இருப்பவர்கள். அந்த வகையில் பார்க்கும் போது அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்று சிங்கள தலைமைகள் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. தமிழர்களைப் பொறுத்தவரையில் 1978ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பயங்கரமாக தடைச் சட்டமும், இலங்கையில் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்த அவசர கால சட்டமும் அவர்களது சிறை வாசத்திற்கு வழி வகுத்தன. தமிழ் இளைஞர் என ஒருவரை அடையாளம் காணும் போது அவரை கைது செய்து சிறையில் அடைப்பதும் அதன் பின்னர் தான் அவர் மீது ஏதாவது குற்றங்கள் உள்ளதா என தேடி பார்ப்பது அரசாங்கத்தின் வழமையாக இருக்கின்றது. இதன் காரணமாக குற்றச்சாட்டுகள் எதுவுமே இல்லாமல் தமிழ் இளைஞர்கள் பல வருடக் கணக்காக சிறை வாசம் அனுபவிக்கும் நிலைமை காணப்படுகிறது. இதனால் தான் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கப்படுகின்றது.

தீபாவளி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் எட்டு அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்ட சில தினங்களில் மேலும் மூன்று கைகள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட மூன்று கைதிகளுமே 15 வருடங்களுக்கு மேலாக சிறைவாசத்தை அனுபவித்த பின்னர் நிரபராதிகளாக காணப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள். அதாவது எந்தவித காரணங்களும் இல்லாமல் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக தமது இளமை காலத்தில் 15 வருடங்களை அவர்கள் சிறையில் வீணாக்கி இருக்கின்றார்கள். அதேவேளையில், பொதுமன்னிப்பு என்ற பெயரில் விடுதலையான கைதிகள் குறித்த மற்றொரு அதிர்ச்சி தரும் உண்மையும் கசிந்திருக்கின்றது. தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா இந்த அதிர்ச்சியான தகவலை ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையை ஆதாரம் காட்டி வெளியிட்டிருக்கின்றார்.

விடுதலை செய்யப்பட்ட அந்த எட்டு கைதிகளில் நால்வர் நீதி மன்றம் வழங்கிய தண்டனையையும்விட கூடுதல் காலம் சிறை வாசத்தை அனுபவித்திருக்கின்றனர். மூன்று கைதிகளுக்கு முப்பது வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர்கள் இருபத்தியிரண்டு வருடகாலம் சிறையில் இருந்து விட்டார்கள். இன்னொரு கைதிக்கு பதினொரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் பதின்நான்கு வருடங்கள் சிறை வாசம் அனுபவித்து விட்டார். பத்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதி பதின்நான்கு வருடங்கள் சிறையில் இருந்தார். ஐந்து வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இரு கைதிகள் பதின்நான்கு வருடங்கள் சிறைக்குள் இருந்துவிட்டாரகள். இது தான் ஜெஹான் பெரேரா வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்.

நிலைமை இவ்வாறுள்ள போது தமிழ்த் தலைவர்கள் இது தொடர்பான விபரங்கள் எதனையும் பெறாமல், எதற்காக காலத்தை வீணடித்தார்கள்? இப்போதும் சிறையில் உள்ள கைதிகளில் எத்தனை பேர் இவ்வாறான நிலையில் இருப்பார்கள்?

2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த உடனடியாகவே நல்லிணக்கத்தின் அடிப்படையில் அரசியல் கைதிகளை அனைவரும் விடுதலை செய்யப்பட்டு இருக்க வேண்டும். எந்த ஒரு நாட்டிலும் இவ்வாறு போர் முடிவுக்கு வரும் போது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கான முதலாவது கட்ட நகர்வாக அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவது வழமை. இருந்த போதிலும் இலங்கை அரசாங்கம் சிங்கள பௌத்த மேலாதிக்க நிலைப்பாட்டில் இருந்ததும் தமிழ் மக்களை அடக்கி ஆழ முனைந்தமையும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமைக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

அன்று முதல் தமது விடுதலைக்கான கோரிக்கையை முன்வைத்து தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டங்கள் உட்பட பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள். தமிழ் அரசியல் கட்சிகளும் மனித உரிமைகள் அமைப்புகளும் கூட அரசியல் கைதிகளில் விடுதலைக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்திருக்கின்றன.

இது தொடர்பில் அக்கறை செலுத்தாத அரசாங்கம் இப்போது எட்டு தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக நாடகமாடுவதற்கு சர்வதேச ரீதியாக உருவாகியிருக்கும் அழுத்தங்களும் (22ம் பக்கம் பார்க்க)

# 16 வருடங்கள் சிறையில் வாடும் சிவலிங்கம் ஆரூரனின் படைப்பிற்கு அரச இலக்கிய விருது!

சந்தேகத்தின் அடிப்படையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொறியியலாளர் சிவலிங்கம் ஆரூரனின் படைப்பிற்கு அரச இலக்கிய விருது வழங்கப்பட்டுள்ளது.சிறையில் இருந்தவாறு இவர் எழுதிய ஆதுரசாலை சுய நாவல் இலக்கியத்துக்கு அரச இலக்கிய விருது கிடைக்கப் பெற்றது.

2022ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது தமிழ் மொழியில் படைப்பிற்காக `2022 சாகித்திய ரத்னா விருது` யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாக கொண்ட திரு.ஞானசேகரனுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டது.

ஆங்கில மொழி படைப்பிற்கான 2022 சாகித்திய ரத்னா விருது பேராசிரியர் கமினி ஜயசேகரவிற்கும்,சிங்கள மொழி படைப்பிற்கான சாகித்தியரத்னா விருது பேராசிரியர் சந்திரசிறி பள்ளியகுருவிற்கும் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டது.

65ஆவது வருட அரச இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 28 ஒக் 2022 பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

2006 ஆம் ஆண்டு கொழும்பு பித்தளை சந்தியில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குல் சம்பந்தமாக சந்தேகநபராக மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிவலிங்கம் ஆருரன் எழுதிய `ஆதுரசாலை` நூலுக்கு சுய நாவலுக்கான விருது வழங்கப்பட்டது.

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பைத் தொடரும் போது கைது குறித்த குண்டுத்தாக்குதல் தொடர்பில் சந்தேக நபராக கைது செய்யப்பட்டார்.

கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவர் ஏழு தமிழ் மொழி மூலமான நூல்களையும்,ஒரு ஆங்கில மொழி நூல் அடங்களாக 8 நூல்களை எழுதியுள்ளார்.2016 இலும் சிறந்த தமிழ் நாவலுக்கான அரச சாஹித்திய விருதையும் வென்றார்.

மெகசின் சிறைச்சாலையின் சிரேஷ்ட சிறைச்சாலை அத்தியட்சகர் ஜகத் வீரசிங்கவின் பாதுகாப்புக்கு மத்தியில் இந்த விழாவிற்கு அழைத்து வரப்பட்ட



அவர் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடமிருந்து விருதைப் பெற்றுக் கொண்டார். ஆரூரனின் பெற்றோரும் விழாவில் கலந்து கொண்டனர். ஆரூரனின் தந்தை ஒரு விமான பொறியியலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோத்தபாய போன்று பேசுகிறார் மகேஷ் கட்டுலந்த

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக கோட்டாபய ராஜபக்ஷவை போன்று கருத்து வெளியிட்டுள்ளதாக சர்வ தேச ஜூரர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் போனமைக்கான ஆதாரங்கள் இல்லை என்றும், காணாமல் போனோரில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டார்கள் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் குறித்த அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த வெளியிட்ட இந்த கருத்து தொடர்பாக தாம் கரிசனையடைவதாகவும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

போரின் போது படையினரிடம் கையளித்த தமது உறவினர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறும் கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உறவுகள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தம்மீது முன் வைக்கப்படும் குற்றச் சாட்டுக்களுக்கான பிரதிபலிப்பாக இலங்கை தமது உள்ளகப் பொறிமுறையை விளம்பரப் படுத்தி வரும் நிலையில் அவர் இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளதாக குறித்த ஆணைக் குழு குற்றம் சாட்டியுள்ளது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# சட்டத்துறைப் போராளிக்கு யாழ்.மண்ணில் நினைவேந்தல்

## இது நம்ம யாழ்ப்பாணம் 4

– யாழ்.நகரில் இருந்து பகிரதன் –

கொரோனா பெருந்தொற்று பறித்தெடுத்த இலங்கையின் மிக முக்கிய பெண் ஆளுமைகளில் பிரபல சட்டத்தரணி கௌரி சங்கரி தவராஜா முக்கியமானவர். பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்த காலத்திலிருந்தே பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கும் இந்தப் பெயரை தமிழ் மக்கள் யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக துணைச்சலுடன் போராடி பல தமிழ் இளைஞர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்த ஒரு இரும்புப் பெண்மணி அல்லது ஒரு சட்டப்போராளி என்று கௌரி சங்கரி தவராஜாவை குறிப்பிட முடியும்.

கடந்த வருடம் கொரோனா முடக்கம் கடுமையாக அமுலிலிருந்த காலகட்டத்தில் கொழும்பில் தொற்றுக்கு இலக்காகி கௌரி சங்கரி மரணமடைந்த போது, அவரது கணவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜாவும் கொரோனாவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்தார்.

கடந்த 2021 ஆகஸ்ட் 23 ஆம் திகதி மரணமடையும் போது கௌரிக்கு வயது 66. இது வாழ்வை முடித்துக் கொள்ளும் வயதல்ல. இன்னும் பலவற்றைச் சாதிக்க வேண்டிய நிலையிலேயே அந்தப் பெருந்தொற்று அவரது உயிரைப் பறித்தது.

பலருக்கும் விடுதலையைப் பெற்றுக் கொடுத்த கௌரியின் மரணச் சடங்கு இரண்டு அல்லது மூன்று பேர் மட்டுமே கலந்து கொண்ட நிலையில், கடுமையான சுகாதாரக் கண்காணிப்பின்கீழ் நடைபெற்றது. கணவர் கே.வி.தவராஜா கடுமையான சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் மருத்துவமனையிலிருந்து பொரளை மயானத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

மனைவியின் பிரிவிலிருந்து கே.வி.தவராஜா தேறிவரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் கொளரியின் நினைவாஞ்சலிக் கூட்டம் ஒன்றும் அவரது நினைவாக கே.வி.தவராஜா எழுதிய கௌரி நீதிக்கான குரல் என்ற நூலின் வெளியிட்டு நிகழ்வும் கௌரியின் 67 ஆவது பிறந்த தினமான கடந்த சனிக்கிழமை (ஒக்ரோபர் 29 ஆம் திகதி) யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தனியார் விடுதியில் நடைபெற்றது.

முக்கியமான தமிழ் அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள், தொழில் அதிபர்கள், ஊடகத்துறை முக்கியஸ்த்தர்கள், சமூகப் பிரமுகர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் இதில் கலந்து கொண்டிருந்தார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டு கொளரியின் வாதத் திறமையினால் விடுதலையான பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு உரையாற்றிய தமிழ் அரசியல்வாதிகள் பலர் கூட, ஏதோ ஒரு காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதானவர்கள். தமக்காக ஆஜராகி தமக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தது கௌரி அக்கா தான் என்பதை உணர்ச்சி ததும்பத் தெரிவித்ததையும் கேட்க முடிந்தது. இந்த வழக்குகள் அனைத்தையும் இலவசமாகவே கௌரி செய்திருந்தார் என்பதையும் அவர்கள் தெரிவித்தார்கள்.

சில அரசியல் கைதிகள் விடுதலையாகும் போது அவர்களிடம், ஊருக்குச் செல்வதற்குக் கூட பணம் இருப்பதில்லை. அது குறித்து கூட கேட்டறிந்து அவர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து கொளரி அனுப்பி வைத்திருக்கின்றார். என்பதை முன்னாள் அரசியல் கைதிகள் பலர் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது.

கௌரி சங்கரியுடன் கடந்த நான்கு தசாப்தங்களாக வாழ்க்கையிலும், தொழிலிலும் இணைந்து செயற்படுபவர் அவரது கணவர் கே.வி.தவராஜா. ஜனாதிபதி சட்டத்தரணியான அவரும், மனைவியுடன் இணைந்து பல முக்கியமான வழக்குகளில் ஆஜராகியிருக்கின்றார்.. ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் அவற்றில் பெரும்பாலானவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

தமிழ் அரசியல்வாதிகளுக்காக மட்டுமன்றி, தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த காலங்களில் கூட அவர்களுக்காக, ஆஜராகி அவர்களுக்கு விடுதலையை வாங்கிக் கொடுத்தவர்கள் இவர்கள் தான். ஊடகத்துறைக்கு ஆபத்தான ஒரு நாடாகவே இலங்கை இருந்திருக்கின்றது. தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர் கொண்ட அச்சுறுத்தல்களும் ஆபத்துக்களும் கடுமையாக இருந்தன. இந்தக் காலப் பகுதியில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும் ஒருவராக கௌரி இருந்திருக்கின்றார்.

கே.வி.தவராஜா – கௌரி தம்பதிகளுக்கு உற்ற நண்பராக இருந்த ஒருவர் விக்கி என்ற இளைஞர் இந்த மூன்று பேருக்குமே கடந்த வருடத்தில் ஒரே நேரத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டது. மூன்று பேரும் ஒரே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அதன் பின்னர் என்ன நடைபெற்றது என்பதை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வில் கே.வி.தவராஜா இவ்வாறு கூறுகின்றார் –மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 23ஆம் திகதி கௌரி மரணமடைகின்றார். அந்த வேதனையில் தான் துடித்துக் கொண்டிருந்த போது 26 ஆம் திகதி மற்றொரு செய்தி வருகின்றது. விக்கி என்ற எனது உடன் பிறவாச் சகோதரன் விக்கினேஸ்வரனும் காலமானார் என்பது தான் அந்தச் செய்தி. அப்போது ஏற்பட்ட துன்பததை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் இல்லை.

அந்த நேரத்திலே எனது மனைவியின் இறுதிச் சடங்கையாவது செய்து விட வேண்டும் என நான் துடித்தேன். அப்போது, கொரோனா கட்டுப்பாடுகள் கடுமையாக இருந்தமையால் இறந்தவர்களின் உடலைக் கூட கொடுக்க மாட்டார்கள். 23 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரையில் மருத்துவமனையில் நான் இருந்த போது எப்படியாவது எனது மனைவியின் இறுதிக் கிரியைகளைச் செய்து விட வேண்டும் என்பதற்காக எனது உயிரை நான் பிடித்துக் கொண்டேன். அப்படி உறுதியாக இருந்து தான் 29 ஆம் திகதி இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு என்னை அனுமதித்தார்கள்.



1978 ஆம் ஆண்டு சட்டக்கல்லூரிக்கு வந்த நாளிலிருந்து கொளரி எனக்கு துணையாக இருந்தவர். அந்த 42 வருடங்களின் பின்னர் இன்று நான் தனிமையில். எனது மனைவியும், எனது உற்ற நண்பனும் மரணித்த வேளையில் நானும் மரணமடைந்திருக்க வேண்டும். ஆனால், ஆண்டவன் என்னை உயிருடன் வைத்திருப்பது நான் இந்த தாய் மண்ணுக்குச் செய்ய வேண்டிய கடமை இருப்பதால் தான் என்று நான் நினைத்துக் கொண்டேன். இப்போதும் எனது மனைவி என்னை இயக்கிக் கொண்டிருப்பதாகவே நான் கருதுகின்றேன். அதனைத் தான் நான் முன்னெடுத்துச் செல்லப் போகின்றேன்.

இவ்வாறு சொன்ன கே.வி.தவராஜாவின் ஒரு உன்னத படைப்புத்தான் அன்றைய தினம் அவரால் எழுதி வெளியிடப்பட்ட, கௌரி – நீதிக்கான குரல் என்ற நூல். மிகவும் பெறுமதி வாய்ந்த ஆவணமாக இதனை தவராஜா எழுதியிருக்கின்றார்.

394 பக்கங்களுடன் வெளி வந்திருக்கும் இந்த நூல் பிரதானமாக மூன்று விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்றது. முதலாவது மறைந்த கௌரி சங்கரியின் நினைகளைச் சுமந்து வருகின்றது. இரண்டாவதாக, தமிழ் மக்களை அடக்குவதற்காக 1978 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டுவரும் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்த தெளிவான விளக்கத்தைத் தருகின்றது.

மூன்றாவதாக, இலங்கையின் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான பல வழக்குகள் குறித்த பதிவுகளை இந்த நூல் தருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் அதன் கீழான முதலாவது வழக்காக நீதிமன்றத்துக்கு வந்தது குட்டிமணி, ஜெகன் ஆகியோர் மீதான வழக்கு தான். இந்த வழக்கிலிருந்து பல நூற்றுக்கணக்கான வழக்குகளில் தவராஜா தம்பதிகள் ஆஜராகியிருக்கின்றார்கள்.இந்த வழக்குகளை எவ்வாறு இவர்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டார்கள் என்பது குறித்த தகவல்கள் மிகவும் சுவாரஸ்யமாகவும், அதிகமான தகவல்களுடனும் கே.வி. தவராஜாவால் விபரிக்கப்பட்டுள்ளது.

1981 முதல் 2022 வரையில் பல நூற்றுக்கணக்காக மனித உரிமை வழங்குகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்குகளில் தவராஜா தம்பதியினர் ஆஜராகி அவற்றை வெற்றிகரமாக எதிர் கொண்டுள்ள போதிலும், அதில் மிகவும் முக்கியமான நாற்பது வழக்குகள் தொடர்பாக இதில் எழுதப்பட்டுள்ளது. சட்ட நுணுக்கங்களுடன், மிகவும் சுவாரஸ்யமான முறையில் இந்த வழக்குகள் குறித்த விபரங்கள் எழுதப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலான வழக்குகள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்த வகையில் இதனை ஒரு மிகச்சிறந்த ஆவணமாக கே.வி. தவராஜா உருவாக்கியிருக்கின்றார்.

அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், சட்டத்துறை மாணவா்கள் மட்டுமன்றி அரசியலில் ஆர்வமுள்ள அனைவரும் படிக்க வேண்டிய – பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய ஒரு ஆவணமாக தனது மனைவியின் நினைவாக இதனை கே.வி. தவராஜா உருவாக்கியுள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடுமைகளைத் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் நிலையில், அவர்களுக்குத் தேவையான சட்டநுணுக்கங்களைத் தருவதாகவும் இந்த நூல் உள்ளது.

ஆங்கிலம், பிரெஞ் போன்ற மொழிகளுக்கும் இதனை மொழிபெயர்ப்பதன் மூலமாக இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எவ்வாறு ஒரு இனம் அடக்கப்பட்டது – அடக்கப்படுகின்றது என்பதை சர்வதேச சமூகத்தின் பார்வைக்கும் கொண்டு செல்ல முடியும்!



# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

29 ஒக்டோபர் 2022 முதல் 04 நவம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600


## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா பேரின்பநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா பேரின்பநாதன் (லெப் கேணல் நாதன்) அவர்களது 26வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு கார்த்திகேசு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு கார்த்திகேசு அவர்களின் 21வது ஆண்டு நினைவு நாள் 05 நவம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு முருகேசு கார்த்திகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 02 நவம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம்

சரவணை மேற்கு வேலனையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பு 6ஐ வதிவிடமாகவும் திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 01 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாவும் கொண்டிருந்த திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது 10வது ஆண்டு நினைவு நாள் 08 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சந்திரசேகரம்பிள்ளை அன்னலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி செபபாக்கியம் கிறிஸ்தோப்பர் இராஜரெத்தினம்

யாழ்.ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செபபாக்கியம் கிறிஸ்தோப்பர் இராஜரெத்தினம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 24 ஒக்டோபர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செபபாக்கியம் கிறிஸ்தோப்பர் இராஜரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 ஒக்டோபர் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி தங்கேஸ்வரி சிவநேசன் அவர்களது 76வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி தங்கேஸ்வரி சிவநேசன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




30 ஒக்டோபர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் **Renlin** பிறேம்ஜி அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




31 ஒக்டோபர் 2022கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனனின் 7வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




01 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமை சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலாதேவி வர்ணகுலசிங்கம் அவர்களது 8வது ஆண்டு நிரனவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 நவம்பர் 2022 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுபேந்திரன் புவனேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி லக்ஷனா சுபேந்திரனின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி லக்ஷனா சுபேந்திரன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 நவம்பர் 2022 புதன்கிழமை வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 ஒக்டோபர் 2022 கனடாவில் வசிக்கும் திரு திருமதி கிருஷ்ணகுமார் கிருசாந்தி இணையரது 19வது திருமண நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 03 நவம்பர் 2022 வியாழக்கிழமை இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




28 ஒக்டோபர் 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் சிவஸ்ரீ சிவா குருக்கள் சகானா இணையரது இரண்டாவது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இஅணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




27 ஒக்டோபர் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை திவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்.



# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக 10வது ஆண்டாக நடாத்திய இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்

























# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக 10வது ஆண்டாக நடாத்திய இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்













நன்றி
ஐயா
4 U






# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

# Mannar Friendship Association
## Mannar Night 2022
(Celebrating 19th and 20th in our 21st Year)

**Location:** New Jaasmin Banquet Hall and Convention Centre
90 Nolan Court, Markham, ON L3R 4L9, Canada

**Date: Saturday, November 19, 2022**

**Time: 6:00pm**

www.MFAonline.ca

**Contact:**
Sylvester Nicholas
Cell: 647 302 4636
Office: 416 613 4965
Mike Xavier : 647 839 6829

# போதைப் பொருளுக்கு எதிராக ஒரு படைப்பிரிவு?



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -


வடக்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது கஞ்சா தொகையாகக் கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து யாழ்ப்பணப் பகுதிக்கு மிகவும் பிரமாண்டமான முறையில் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இளம் சந்ததியினரும் அவற்றிற்கு அடிமையாகின்ற தன்மையானது வெகுவாக அதிகரித்துள்ளது.

அந்த வகையில் இந்த துர்ப்பாக்கிய நிலையினை இல்லாதொழிப்பதனை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேயசுந்தர அவர்களினுடைய தலைமையில் விசேட படைப் பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதனூடாக யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் கடத்தல்களை தடுத்தல், கைது செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தெடர்புள்ள நபர்களை நீதி முன்நிறுத்துதல் போன்ற செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இது பலாலி படைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பின் ஒருபகுதி.

அதாவது முடிவில் படைத் தரப்பும் போதைப் பொருளுக்கு எதிராக களத்தில் இறங்கிவிட்டது என்று பொருள். தமிழ் மக்கள் அழைத்தாலும் அழைக்கா விட்டாலும் படைத்தரப்பு அவ்வாறு இறங்கும். ஏற்கனவே அவர்கள் சந்திகளில் நிற்கிறார்கள். ஏற்கனவே எஸ்.டி.எப் களத்தில் இறங்கி விட்டது. சில நாட்களுக்கு முன் எஸ்.ரி.எப் வவுனியாவில் தானும் களமிறக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. படைத்தரப்பு இயற்கை அனர்த்தக்கங்களின் போதும் பெருந்தொற்று நோயின் போதும் களத்தில் இறங்கியது. இலங்கைத் தீவில் மேலிருந்து கீழ் நோக்கிய மிகப் பலமான நிறுவன கட்டமைப்பை படைத்தரப்பு கொண்டிருக்கிறது. இலங்கை நாட்டில் அதிக ஆளணியையும் அதிக வளங்களையும் கொண்ட அரசு உபகரணம் அது தான். எனவே இது போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் அவர்களை ஈடுபடுத்தும்.

ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் தீவின் மொத்த படைக்கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பகுதிகளின் நிலை கொண்டிருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. தமிழ் கடல் பெருமளவுக்கு ஸ்ரீலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. நாட்டின் படைக் கட்டமைப்பின் மூன்றில் இரண்டு பகுதி நிறுத்தப்பட்டிருக்கும் தமிழ் பகுதிக்குள் அதிகளவு போதைப்பொருள் நுகர்ப்படுகிறது என்றால் அதற்கு அப்பகுதியை கட்டுப்படுத்தும் படைத்தரப்பும் பதில் கூற வேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் கேட்கிறார்கள்.

அண்மையில் இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவித்திருந்தார். மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் பின்வருமாறு கூறியுள்ளார் இதனை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிறது. அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' அதாவது போதைப்பொருள் வலைப்பின்னலுக்கும் குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கும் படைத்தரப்பு அல்லது காவல்துறையின் மீது அவர் மறைமுகமாக குற்றம் சாட்டுகிறார். இப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள் படைத்தரப்பு போதைப் பொருளுக்கு எதிராக களமிறங்கியிருக்கிறது.




அவர்கள் களமிறங்குவதற்கு முன்னரே கடந்த சில வாரங்களாக தமிழ்ப் பகுதிகளில் போலீஸும் அதிரடிப் படையும் ஆங்காங்கே போதைப் பொருள் வலைப்பின்னலுக்கு எதிராக முன்னெடுத்து வரும் முறியடிப்பு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் ஒப்பிட்டுளவில் அதிகரித்த அளவில் வெளிவருகின்றன. குறிப்பாக போதைப்பொருள் பாவனையாளர்களை, விநியோகஸ்தர்களைக் கைது செய்வது தொடர்பான செய்திகள் அடிக்கடி வெளிவருகின்றன. கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களோடு போலீசார் காட்சியளிக்கும் படங்களும் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன. இச்செய்திகளை தொகுத்துப் பார்த்தால் போதைப்பொருளுக்கு எதிரான முறியடிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதான ஒரு தோற்றம் நமக்கு கிடைக்கும்.

ஆனால் அரசின் சட்டம் ஒழுங்கைப் பேணும் அமைப்புகளால் மட்டும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு விடயம் இதுவல்ல என்பதனை நான் ஏற்கனவே பல தடவை எனது கட்டுரைகளில் சுட்டிக்காட்டியுள்ளேன். தமிழ்மக்களின் தேசிய இருப்பை சிதைக்கும் உள்நோக்கத்தோடு போதைப் பொருள் விநியோகம் திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுவதாக ஒரு சந்தேகம் பரவலாக உண்டு. சுமந்திரனும் சிறீதரனும் கூறுவது போல அது மேலிருந்து கீழ்நோக்கிய ஒரு திட்டமிட்ட செயலாக இருக்கக்கூடும். ஆனால் அதை எதிர்கொள்வதற்கு கீழிருந்து மேல் நோக்கிய ஒரு கட்டமைப்பை சுய கவசங்களை தமிழ்மக்கள் கட்டியெழுப்ப வேண்டும். இது தொடர்பில் கீழிருந்து மேல் நோக்கிய விழிப்பைக் கட்டியெழுப்ப வேண்டும்.

எனது நண்பர் ஒருவர் கூறுவது போல தமிழ்பகுதிகளில் கிராம மட்டத்தில் படைப்புலனாய்வுத்துறை வைத்திருப்பது போன்ற வினைத்திறன் மிக்க மேலிருந்து கீழ் நோக்கிய வலைப்பின்னல் நமது கட்சிகளிடமே கிடையாது.

தமிழ் இளையோர் மத்தியில் குறிப்பாக பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கு தனிய மேலிருந்து கீழ்நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்க முடியாது. மாறாக கீழிருந்து மேல் நோக்கிய சுயகவசங்களை தமிழ் மக்கள் கட்டி எழுப்ப வேண்டும். அதை தனிய மருத்துவர்களால் மட்டும் செய்ய முடியாது என்பதனைத் தான் அண்மை காலங்களில் கிடைக்கும் புள்ளிவிவரங்கள் நமக்குக் காட்டுகின்றன. மருத்துவர்கள் இதில் ஒரு பகுதிதான். மருத்துவ சிகிச்சைக்கு அப்பால் ஒரு கூட்டுச்சிகிச்சை தேவைப்படுகிறது. அதைத் தனிய மருத்துவர்கள் மட்டும் செய்ய முடியாது. இளைய தலைமுறைக்கு தலைமை தாங்க இலட்சியப் பாங்கான தலைவர்கள் வேண்டும். இளைய தலைமுறையை இலட்சியத்தை நோக்கிச் செலுத்தப்பட்ட அம்புகளாக மாற்றினால் இது போன்ற துஷ்பிரயோகங்களுக்கு இடமிருக்காது. அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், அறிவுஜீவிகள்,சமயப் பெரியோர், கல்விச் சமூகம், படைப்பாளிகள், ஊடகங்கள் என்று எல்லாத்தளங்களிலும் இருக்கக் கூடிய செயல்பாட்டாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும். அக்கூட்டுச் செயற்பாட்டுக்கு அரசியல் வாதிகளோ அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களோ தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவ்வாறு தலைமை தாங்கும் தகுதியோ தரிசனமோ பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை,பலமான குடிமக்கள் சமூகமும் இல்லை என்ற வெற்றிடத்தில் தான் போதைப் பொருள் பாவனை அதிகரிக்கிறது.

இதை ஒரு குற்றச்செயலாக மட்டும் கருதி அதற்குரிய முறியடிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. மாறாக இதை ஒரு கூட்டுநோயாக ஒரு பண்பாட்டு வெற்றிடமாக, ஒரு அரசியல் தலைமைத்துவ வெற்றிடமாக, உள்ளூர் தலைமைத்துவ வெற்றிடமாக, ஆன்மீக வறட்சியாக, இன்னபிறவாக தொகுத்துப் பார்க்கவேண்டும்.இதில் தனிய மேலிருந்து கீழ் நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்காமல் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மத நிறுவனமும் ஒவ்வொரு பாடசாலையும் தங்களுக்குள்ள கூட்டுப் பொறுப்பை உணரவேண்டும்.

வீட்டில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே இறுக்கமான பாசப் பிணைப்பு இருந்திருந்தால் இடையில் ஒரு போதைப்பொருள் வியாபாரி நுழைந்திருக்க முடியாது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் உள்ளூர் தலைவர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் சமயப் பெரியாருக்கு இடையே இடைவெளி அதிகரிக்கும் பொழுது இது போன்ற துஷ்பிரயோகங்களும் அதிகரிக்கும். அந்த இடைவெளி எங்கிருந்து வந்தது? என்று கண்டு பிடிக்க வேண்டும்.

போட்டிக்கல்வி முறைமையானது பாடசாலைகளின் மதிப்பைக் குறைத்து விட்டது. இதனால் பாடசாலை ஆசிரியர்கள் பிள்ளைகளின் மீது செல்வாக்குச் செலுத்துவதில் வரையறைகள் அதிகரிக்கின்றன.

அண்மையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாணப் பிரிவும் யாழ் போதனா வைத்தியசாலையின் சம்பந்தப்பட்ட பிரிவும் இணைந்து இது தொடர்பான அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்தன.ஒரு பள்ளிக்கூடப் பிள்ளை போதைப்பொருள் பாவனையாளராக இருந்தால் அதை கண்டு பிடிப்பதற்கு வேண்டிய அறிகுறிகளை அவர்கள் விவரமாக தெரிவித்திருந்தார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால்,ஒரு பிள்ளையிடம் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவதனை யார் கவனிப்பது?. அதைப் பெற்றோரும் ஆசிரியர்களும்த ான் கவனிக்க வேண்டும்.

வீட்டில் உள்ள மூத்த தலைமுறை தான் அதைச் செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்கு மூத்ததலைமுறையின் கவனத்தைக் கலைப்பதற்கு பல விடியங்கள் வந்து விட்டன. குறிப்பாக திரைத் தொடர்கள், கைபேசிச் செயலிகள் போன்றவற்றை கூறலாம். ஒரு முதிய தலைமுறை திரைத் தொடர்களின் கைதியாகி விட்டது. நடுத்தர வயதுக்காரர்கள் கைபேசிகளின் கைதிகளாகி விட்டார்கள். இது பொழுதுபோக்கைகளின் காலம். மூத்த தலைமுறை பொழுதுபோக்குச் சாதனங்களில் மூழ்கிக் கிடக்கும் பொழுது, இளைய தலைமுறை எங்கே போகிறது ?என்ன செய்கிறது? யாருடன் தொடர்பை வைத்திருக்கின்றது? போன்றவற்றை கவனிப்பதற்கான நேரங்கள் குறைகின்றன.இவ்வாறான தொடர்ச்சியான அவதானிப்பும் கவனிப்பும் இல்லாத வெற்றிடத்தில்தான் போதைப்பொருள் நுழைகிறது.வாள்கள் நுழைகின்றன.

யாழ்.போதனா மருத்துவமனை வெளியிட்டிருக்கும் அந்தப் பிரசுரத்தில் காணப்படும் குணக்குறிகளை தொடர்ச்சியாகக் கவனிப்பது என்று சொன்னால் பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவையும் தொடர்ச்சியாகக் கவனிக்க வேண்டும்.அதாவது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும். பிள்ளைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையே அதிகபட்ச தொடர்பாடல் இருக்க வேண்டும். எனவே போதைப் பொருட்களுக்கு எதிரான சுயகவசங்களை இங்கிருந்து தான் கட்டியெழுப்பத் தொடங்க வேண்டும்.

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசம் என்று கூறுகிறார்கள்.ஒரு தேசியஇனம் என்ற அடிப்படையில் தமக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு சமூகமாக,பலமான ஒரு திரட்சியாக இல்லை என்பதனை அண்மையில் எரிபொருள் வரிசைகளில் கண்டோம்.இப்பொழுது அவர்கள் குடும்பமாகக் கூட இல்லையா என்று கேட்க வேண்டிய ஒரு நிலைமையை போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தியிருக்கிறதா?

உ

சிவமயம்

சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

**635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 | TEL: 416-321-6104**


**Website: www.ayyappan.ca | Facebook: Canada Sri Ayyappan Hindu Temple**

## MANDALA MAKARA FESTIVAL - 2022

## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்







### ஸ்ரீஐயப்பன் மாலை அணியும் வைபவம்

### SRI AYYAPPAN GARLAND OCCASION

**16.11.2022 புதன்கிழமை**

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஜயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம், அதிகாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். உபயங்கள் செய்ய விரும்பும் அடியார்களும் முன்கூட்டியே காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

### விசேட ஹோமம் – மாலை அணிதல்

16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம், துளிசிமாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இடம் பெறும்.

இறை சேவையிலுள்ள
ஆலய அறங்காவலர் சபை

# தமிழரசுக்கட்சி மட்டுமா தவறிழைத்தது?

தமிழரசுக் கட்சி மட்டுமா தவறிழைத்துள்ளது? எதற்காக அதை இப்படிப் போட்டுத் தாக்கியிருக்கிறீங்கள்? தந்தை செல்வா காலத்திலிருந்து இன்று வரை அது சந்தித்த சோதனைகள் கொஞ்சமல்ல. இருந்தாலும் அதைத் தானே தமிழ் மக்கள் இன்னும் ஆதரிக்கிறார்கள்! இதை எப்படி உங்களால் மறுக்க முடியும்?

தமிழரசுக் கட்சியுடன் கூட்டு வைத்துக் கொண்டதால் தான் தமிழ்க் காங்கிரஸ் பிழைத்தது. இதை மிகப் பெரிய கெட்டிக்காரரான ஜீ.ஜீ. பொன்னம்பலமே புரிந்து கொண்டு செயற்பட்டார். இதன் விளைவாக உருவானதே தமிழர் விடுதலைக் கூட்டணி. ஜீ.ஜீ. பொன்னம்பலத்துக்கு விளங்கியது குமார் பொன்னம்பலத்துக்கும் விளங்கவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் விளங்கவில்லை.

அதனால் தான் அவர்கள் அதி தீவிரமாகச் சிந்திக்கிறார்கள். அதி தீவிரமாகச் சிந்திப்பது பிரச்சினையில்லை. அப்படிச் சிந்திக்கின்ற அளவுக்கு அவர்கள் அதி தீவிரமாகச் செயற்படவும் வேண்டும். ஆனால்,அப்படியொன்றும் இல்லை. அப்படியான ஆட்களையே விட்டிட்டு தமிழரசுக் கட்சியை மட்டும் இலக்கு வைத்துத் தாக்குவதன் உள் நோக்கம் என்ன? ஒப்பிட்டளவில் தமிழ் மக்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும் தமிழரசுக் கட்சியை இணக்கமாகத் தான் பார்க்கிறார்கள். மற்றக் கட்சிகளை விட தமிழரசுக் கட்சியோடு தான் முஸ்லிம்களுடன் உறவும் உண்டு. ஹக்கீமுக்கும் சம்பந்தன் ஐயாவுக்கும் உள்ள அரசியல் உறவையும் நெருக்கத்தையும் உலகமே அறியும். அதைப் போல சிங்களக் கட்சிகளும் அரசியலிலும் அரசியலுக்கு அப்பாலும் தமிழரசுக் கட்சியை ஒரு முக்கியமான தரப்பாகவே பார்க்கிறார்கள்.

இந்தளவுக்கு வேறு எந்தத் தமிழ்க்கட்சிக்கும் ஒரு முக்கியத்துவமும் கிடையாது. இதற்குக் காரணம், தமிழரசுக் கட்சியின் நிதானமான அரசியல் நிலைப்பாடு தான். நீங்கள் ஒரு உண்மையை உணர வேண்டும். தமிழரசுக் கட்சியோடு காங்கிரஸ் உறவு வைத்திருந்ததால் அது தப்பிப் பிழைத்தது. அதைப் போல இப்பொழுது ரெலோவும் புளொட்டும் உறவு வைத்திருக்கின்றன. அந்த உறவை ரெலோவும் புளொட்டும் கைவிட்டால் சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கு நடந்த கதை தான் நடக்கும்.

ஆகவே தமிழரசுக் கட்சியை ஒதுக்கி விட்டு யாரும் தனித்து நின்று ஜெயிக்க முடியாது. அன்றைய தந்தை செல்வா தொடக்கம் அமிர்தலிங்கம், இன்றைய சம்பந்தன் ஐயா வரை அனைவரிடத்திலும் காணப்படும் அரசியல் முதிர்ச்சியும் இதற்குக் காரணம். சம்பந்தன் ஐயாவைச் சிலர் விமர்சிக்கிறார்கள். ஆனால், அவரை விட்டால் வேறு யார் நல்ல தலைவர் உண்டு? இதையெல்லாம் புரிந்து கொண்டு கருத்துச் சொல்லுங்கோ.... அது தான் நல்லது....என்று என்னுடைய கடந்த வாரக் கட்டுரையைப் படித்து விட்டுத் தொலைபேசியில் அழைத்துப் பேசினார், தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர்.

தமிழரசுக் கட்சியின் எதிர் காலம்? எப்படி இருக்கும்? என்ற தலைப்பில் கடந்த வாரம் நான் எழுதிய கட்டுரைக்கான பதிலே அதுவாகும். அந்தக் கட்டுரையில் (கடந்த வாரம் அதைப் படிக்க முடியாதவர்களுக்காக) தமிழரசுக் கட்சின் கடந்த கால, நிகழ்காலத் தவறுகளைப் பேசி, அது எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன மாதிரியான விளைவுகளை உண்டாக்கும் என்று எழுதியிருந்தேன்.

இப்படி நான் மட்டும் எழுதவில்லை. தமிழரசுக் கட்சியின் இயலாமையைப் பற்றியும் அதனுடைய தவறைப் பற்றியும் பலரும் தொடர்ச்சியாக எழுதி வந்திருக்கிறார்கள். ஏன் தந்தையர்களும் தனயர்களும் என்பது உட்படத் தனியாகப் புத்தகங்களே வந்துள்ளன. பொதுவெளியில் பலரும் பேசி வந்துள்ளனர். இந்த நாட்களில் கூட பலரும் ஆதாரபூர்வமான காரணங்களையும் தகவல்களையும் வைத்து எழுதி வருகிறார்கள்.

ஆனால் இவற்றின் பிரதிபலிப்புகள் தமிழரசுக் கட்சிக்குள்ளும் வெளியிலும் எதிரொலிப்பதில்லை. விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செய்வாய்?'' என்று பாரதியார் கேட்டதைப் போலத் துக்கம் பெருக நாமும் கேட்க வேண்டியுள்ளது. அவ்வளவுதான். ஆனாலும் நம்மால் இதைப் பேசாமல் இருக்க முடியாது. அது வரலாற்றுக்கும் நம் காலத்துக்கும்




நாம் செய்கின்ற துரோகமாகி விடும். மக்கள் மெல்ல மெல்லத்தான் தமிழரசுக் கட்சி பற்றிய மாயையில் இருந்து விடுபடுவார்கள். இனவாதமும் சாதியத்தைப் போன்ற ஒரு தீராநோயே. எளிதில் குணப்படுத்த முடியாதது.

இந்த அடிப்படையில் தான் முன் சொல்லப்பட்ட தமிழரசுக் கட்சியின் ஆள், தம் பக்கத்தில் உள்ள தவறுகளைப் பற்றிச் சிந்திக்காமல், அதனுடைய பெருமிதங்களைப் பற்றிப் பேசியதும்.

ஆனால் தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவருக்கும் விருப்புக்களும் தெரிவுகளும் இருக்கலாம். அது அவர்களுடைய உரிமையும் சுதந்திரமும் கூட. ஆனால் அந்த விருப்பமும் தெரிவும் பரவலாக நிகழும்போது திரட்சியடைந்திருக்கும் போது அது ஒரு கூட்டுத் தெரிவாகவும் தீர்மானமாகவும் மாறி விடுகிறது. அதுவே குறித்த தரப்பின் அரசியல் போக்காகவும் அடையாளமாகவும் மாறி விடுகிறது. இது அந்தத் தரப்பின் (மக்களின்) நிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் தீர்மானிக்கிறது.

இதற்குப் பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்தும். எதிர்த்தரப்பின் நடவடிக்கைகள். உரிய கட்சிகளின் கொள்கையும் நடைமுறைகளும். ஊடகங்களின் செயற்பாடும் ஆதரவும், பிரதேச ரீதியாக உள்ள இன, மத, சாதிய, பிரதேச, பால் ரீதியான அறிமுகங்களும் செல்வாக்கும், பிராந்திய, சர்வதேச சக்திகளின் தூண்டல்கள் அல்லது அமுக்கல்கள் எனப் பலவாக இது அமையும்.

தமிழரசுக் கட்சியின் அரசியற் பயணத்திலும் இதெல்லாம் உண்டு. சிங்கள அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறையை தமிழரசுக் கட்சி வலுவாகப் பயன்படுத்தி வந்திருக்கிறது. இப்பொழுதும் அதையே அது பயன்படுத்துகிறது. இதை அந்தக் கட்சியின் 60 ஆண்டுகளுக்கு மேலான பாராளுமன்ற வரலாறே நிரூபிக்கும். வேண்டுமானால் அந்தக் கட்சியைப் பிரதிநித்துவம் செய்து வந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகளே சான்று பகரும்.

தொடக்கத்தில் தமிழ் பேசும் மக்களின் விடுதலையை மையப்படுத்திப் பேசி வந்த தமிழரசுக் கட்சி,பின்னாளில் தமிழ் சிங்கள முரண்பாட்டு வாதத்தில் சிக்கி விட்டது. இப்பொழுது அது தமிழ் சிங்கள மோதலாகவும் சிங்கள வெறுப்பு வாதமாகவும் சுருங்கி விட்டது.

ஆகவே தமிழரசுக் கட்சி சுயமாக எதையும் சிந்திப்பதற்குப் பதிலாக அரசாங்கத்தரப்பிலிருந்தும் சிங்களத் தீவிரவாதத் தரப்பிலிருந்தும் வருகின்ற கருத்துகளுக்கு மறுப்புச் சொல்கின்ற மறுத்தான் அரசியலையே செய்கிறது. இதைப்பற்றி நாம் பேசினால் அது தமிழரசுக் கட்சிக்கு எதிரான மனநிலையின் வெளிப்பாடு என்று புரிந்து கொள்ளப்படுகிறது. தமிழரசுக் கட்சியினருடைய பார்வையில் அது தங்களை மட்டும் இலக்கு வைத்துத் தாக்கியதாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

உண்மையில் தமிழரசுக் கட்சி அரசியல் ரீதியாக ஒரு செத்துப் போன பாம்பே. அதனால் எந்தச் சாதனைகளையும் நிகழ்த்த முடியாது. தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் அல்லது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி போன்றவையும் அவ்வாறானவையே.

தமிழரசுக் கட்சி மீதான விமர்சனம் என்பது அதனுடைய அரசியலை வெவ்வேறு விதமாக முன்னெடுக்கின்ற ஏனைய தரப்புகளுக்கும் பொருந்தும். அவை எதற்கிடையிலும் எந்தப் பெரிய வித்தியாசங்களையும் காண முடியாது. குமுதம் பத்திரிகையில் வருகின்ற ஆறு வித்தியாசங்களில் கூட ஊன்றிக் கவனித்தால் சிறிய வித்தியாசங்களைக் காண முடியும். இவற்றில் நுணுக்குக் காட்டியை வைத்துப் பார்த்தாலும் வேறுபாடுகள் எதையும் காண முடியாது. அத்தனையும் ஒரே அரசியல் வியாபாரக் கம்பனிகளே!

எனவே தான் இந்த வணிகக் கம்பனிகளோடு இந்தியாவும் சர்வதேச சமூகமும் தென்னிலங்கையும் தமக்குத் தோதான வணிகப் பேச்சுகளை தமக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் மேற்கொள்கின்றன. தமக்குத் தேவையான விதத்தில் உறவையும் வைத்துக் கொள்கின்றன.

இதொன்றும் புதினமல்ல. இது பலரும் அறிந்த உண்மை. இனியும் இதுதான் நடக்கப் போகிறது. இதைச் சரியாகச் சொன்னால், இவை தமது மக்களுக்குச் சேவை செய்வதைவிட, தமது மக்களுக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பதை விட தமது மக்களுடைய நலன்களைக் குறித்துச் சிந்திப்பதை விட பிறருக்கு லாபகரமாகவே சிந்திக்க முற்படுகின்றன.

இதனால் தான் இவற்றினால் தமிழ் மக்கள் எந்த நன்மைகளையும் பெற முடியாதுள்ளது. இனியும் இதுதான் நடக்கும். தமிழ் மக்கள் எவ்வளவு ஆதரவைத் திரண்டு நின்று வழங்கினாலும் அதை ஆற்றில் புளியைக் கரைப்பதைப் போல கரைத்து விடுவர். பதிலாக அந்த ஆதரவைத் தமக்குரிய அங்கீகாரமாக எடுத்துக் கொண்டு தமக்கான பேரத்தை மட்டும் பேசி முடித்து விடுவர்.

இதனால்தான் மக்கள் மேலும் மேலும் பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். பிரச்சினைகளின் மேல் பிரச்சினைகள். சுமைகளின் மேல் சுமைகள் எனச் சுமைகாவிகளாகி நிற்கின்றனர்.

காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, உடல் உறுப்புகளை இழந்த நிலையிலான பிரச்சினை, உளநிலை பாதிக்கப்பட்ட பிரச்சினை, உறவுகளை இழந்ததால் ஏற்பட்டுள்ள பிரச்சினை, நிலத்தைப் பறி கொடுத்ததால் சந்தித்துள்ள பிரச்சினை, தொழில் வாய்ப்பையும் வருவாயையும் இழந்ததால் ஏற்பட்டுள்ள நெருக்கடி, வளங்களையும் வாழ்நிலையையும் இழந்ததால் உருவாகியுள்ள பிரச்சினை இப்படி ஏகப்பட்ட பிரச்சினை

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



கள். தலைவர்களோ இந்தப் பிரச்சினைகளைப் பேசிப் பேசியே தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்கின்றனர். எந்தத் தலைவரும் எந்தப் பிரதிநிதியும் எந்தக் கட்சியும் இந்தப் பிரச்சினைகளில் ஒன்றுக்குக் கூடத் தீர்வைக் கண்டதில்லை. காணவும் மாட்டார்கள். இவர்கள் மக்களோடு சேர்ந்து வாழ்வதேயில்லை. மக்கள் வேறு. தாம் வேறு என்ற பிரிகோட்டினைப் பக்குவமாக வைத்துக் கொண்டே செயற்படுகின்றனர்.

இதனால் தான் இந்த அரசியல், மக்கள் அரசியலாக இல்லாமல் பிரமுகர் அரசியலாக உள்ளது. பிரமுகர் அரசியலில் அடிமைகள்தான் எஞ்சுவர்.

ஆம், தமிழ் மக்களை அரசியல் அடிமைகளாகவே இவை வைத்திருக்கின்றன. இனவாதத்தைப் பரப்பி, அந்த மூட நம்பிக்கைக்கு அடிமையாக்கி வைத்திருக்கின்றன.

ஒரு பக்கத்தில் சிங்கள இனவாத ஒடுக்குமுறை என்றால், மறுபக்கத்தில் தமிழ் மிதவாத விடுதலையைப் பேசி அதற்கு மாறான அரசியலை மேற்கொண்டு, அடிமை மனோநிலையை வளர்த்துக்கொள்ளும் அடிமை அரசியல் இதுவாகும்.

இதை லேசில் புரிந்து கொள்ள முடியாது. மேலோட்டமாகப் பார்த்தால் சுதந்திரத்துக்கான விடுதலைக்கான அரசியலாகவே தெரியும். ஆனால், அதன் மறுபக்கம் மிக மோசமான அடிமை நிலைப் பேணுகையாகும்.

இதனால் தான் பாராளுமன்றத்தில் பேசுவது, அங்கே செய்து கொள்ளப்பட்ட சத்தியப் பிரமாணம் போன்றவை ஒன்றாகவும் வெளியே இன்னொன்றாகவும் என இரண்டக நிலை காணப்படுகின்றது.

இதைப் பற்றி இவர் களில் எவரும் பேசுவதில்லை. கேள்வி கள் கேட்பதில்லை. அப்படி யாரும் கேள்வி எழுப்பினால் உடனே இந்தத் தரப்புகள் பதறி விடுகின்றன. கேள்வி எழுப்புவோரையும் விமர்சிப்போரையும் எதிரிகள், துரோகிகள், சிங்கள அரசின் ஒத்தோடிகள் என்று முத்திரை குத்த முற்படுகின்றன.

இந்தப் பதட்டம் ஏன்? இந்த முத்திரை குத்துதல்கள் எதற்காக?

இங்கே தான் பிரச்சினையே உள்ளது. இந்தக் கட்டுரையின் தொடக்கத்திலே தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் தெரிவித்த கருத்துகளைப் படிப்போருக்கு தமிழரசுக் கட்சியிடம் ஒரு நியாயம் இருப்பதாகத் தெரியும். ஆனால், இவ்வளவு பெருமைக்குரியதாகக் கூறப்படும் தமிழரசுக் கட்சி, அதனுடைய அரசியல் வரலாற்றில் மக்களுக்குச் சேர்த்த நன்மைகள் என்ன? பெறுமதிகள் என்ன? அது மக்களுடைய எத்தகைய துயர்களைத் துடைத்திருக்கிறது? உண்மையாகவே துயர் துடைப்புக் கட்சியாகச் செயற்பட்டிருக்கிறதா? அல்லது துயர் (22ம் பக்கம் பார்க்க)

# பாடம் கற்ற சீனாவும் கற்காத மஹிந்தாவும்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -







மஹிந்த ராஜபக்ஷ தன்னை ஒரு அரசாங்கத் தலைவராக சீனத் தலைவருக்குக் காட்டிக் கொள்ள முற்பட்டிருப்பதை அவரது வாழ்த்துச் செய்தி சுட்டிக் காட்டுகின்ற அதேவேளை, சீனத் தூதரகத்தின் பதிவு, அவரை பொதுஜன பெரமுனவின் தலைவராகத் தான் அடையாளப்படுத்தியிருக்கிறது.

கடந்த வாரத்தில் உலகம் உன்னிப்பாக கவனித்த விடயங்களில் ஒன்று சீன கம்யூ னிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய மாநாடு. இந்த மாநாட்டில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 96 மில்லியன் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட 2296 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்கள் 205 மத்திய குழு உறுப்பினர்களை தெரிவு செய்தனர்.

மத்திய குழு உறுப்பினர்களால், 24 பேர் கொண்ட பொலிட்பீரோ எனப்படும் நிறைவேற்றுக் குழு தெரிவு செய்யப்பட்டு, அதிலிருந்து, 7 பேர் கொண்ட நிலைக் குழு தேர்வு செய்யப்பட்டது. அந்த நிலைக் குழுவே, கட்சியின் பொதுச்செயலாளராக ஜனாதிபதி ஷி ஜின்பிங்கை தெரிவு செய்தது.

மாவோ சேதுங்கிற்குப் பிறகு, மூன்றாவது பதவிக் காலத்துக்காக தேர்வு செய்யப்பட்ட முதல் தலைவராக ஷி ஜின்பிங் விளங்குகிறார். அவர் தனது அதிகாரத்தை நிலைப்படுத்தி பலப்படுத்தியிருக்கிறார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில், ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்கு அருகில் இருந்த, முன்னாள் ஜனாதிபதி ஹஜீ ஜின்டாவோவின் செயற்பாடுகளும், அதனையடுத்து, அவர் ஷி ஜின்பிங்கின் அறிவுறுத்தலை அடுத்து, அங்கிருந்து பாதுகாவலர்களால் வெளியே கொண்டு செல்லப்பட்டதும் கவனிப்புக்குரிய விடயங்களாக இருந்தன.

சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியில் ஜனாதிபதி ஷி தனது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில் அதற்கு சில நாட்கள் முன்னதாக இலங்கை பாராளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் ராஜபக்ஷவினரின் பல்லுப் பிடுங்கப்பட்டது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியையும், இந்தியாவின் பாரதீய ஜனதாக கட்சியையும் முன்னுதாரணமாக கொண்டே பொதுஜன பெரமுனவை கட்டியெழுப்புவதாக, அதனை தொடங்கிய ஆரம்ப நாட்களில் பஷில் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

குறித்த இரண்டு கட்சிகளும், இன்று உலகின் சக்தி வாய்ந்த அரசியல் கட்சிகளாக விளங்குகின்றன.

அது போல பொதுஜன பெரமுனவைக் கட்டியெழுப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு விரைவாக ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தாலும், அதே வேகத்திலேயே ராஜபக்ஷவினரை கீழே தள்ளிவிட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக ராஜபக்ஷவினருக்குப் பாதகமான அரசியலமைப்பு திருத்தத்துக்கு, அவர்களே கைதூக்கி ஆதரவளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த சமல், நாமல், ஷஷீந்திர ஆகியோர் 22 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்க, மஹிந்தவும், நிபுண ரணவக்கவும், வாக்கெடுப்பில் பங்கேற்காமல் தவிர்த்தனர். இந்த திருத்தத்தின் மூலம், ராஜபக்ஷவினர் தங்களின் அதிகாரங்களை வலுப்படுத்திக் கொள்வதற்காக கொண்டு வந்த பல திருத்தங்கள், செயலிழக்கச் செய்யப்பட்டதுடன், பஷில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்குள் நுழைவதற்கும் தடை போடப்பட்டது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில், மூன்றாவது முறையும் பதவிக்கு வரும், ஜனாதிபதி ஷியின் கனவுக்கு எதிர்ப்பு வெளியிட்டதால் தான் முன்னாள் ஜனாதிபதி ஜீ ஜின்டாவோ வெளியேற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

அதேவேளை, இலங்கையில் எதிர்மாறாக, நிகழ்வு நடந்தேறியிருக்கிறது. அதிகாரத்தை நிலைப்படுத்தும் ராஜபக்ஷவினரின் எதிர்பார்ப்புகளை பொய்யாக்கும் வகையில், பஷில் ராஜபக்ஷவுக்கான கதவுகளை அடைப்பதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறது பாராளுமன்றம்.

இரண்டு எதிர்மறையான அரசியல் சூழல்களைக் கொண்ட இந்த இரண்டு நாடுகளும் தங்களுக்கிடையில் உறவுகளையும் நெருக்கத்தையும பேணி வருகின்றன.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக ஜனாதிபதி ஷி ஜின்பிங் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வாழ்த்துக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

அந்த வாழ்த்துக் கடிதத்தில், அவர், 2013 இல் இலங்கையின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை செழுமைப்படுத்த உதவிய, பாதை மற்றும் அணை முன்முயற்சியின் மூலோபாய முக்கியத்துவத்தை எனது அரசாங்கம் முன்னறிவித்தது.

எங்களது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், உங்கள் தலைமையின் கீழ், சீனாவுடனான வலுவான ஒத்துழைப்பைத் தொடரவும் எங்களின் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இரு நாடுகளின் வளர்ச்சி நிகழ்ச்சி நிரல்களை மேலும் மேம்படுத்த உங்களுடனும் உங்கள் அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்ற நான் எதிர்பார்த்திருக்கிறேன் என்றும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார். அவரது இந்தச் செய்தி ஆட்சியில் உள்ள தலைவரின் கருத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அதாவது எங்களின் அரசாங்கம் என்று அவர், குறிப்பிட்டிருக்கிறார்.

எங்களின் அரசாங்கம் என்பது, இலங்கை அரசாங்கத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறதா அல்லது, பொது ஜன பெரமுன அரசாங்கத்தை சுட்டிக் காட்டுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

இப்போது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இல்லை. ஆனால் அவரது கட்சி தான் ஆளும்கட்சியாக இருக்கிறது.

ராஜபக்ஷவினரின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுகின்ற அவர்களின் நிழல் அரசாங்கம் தான் அதிகாரத்தில இருக்கிறது.

ஆனால் அதனை ஒரு சர்வதேச தலைவருடனான ஊடாட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்த முயன்றிருக்கிறார்.

அதேவேளை ருவிட்டரில் மஹிந்த ராஜபக்ஷ ஒரு வாழ்த்துச் செய்தியைப் பதிவிட்டிருந்தார்.

அதில் அவர் சீனக் கம்யூ னிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக ஷி ஜின்பிங் தலைமையின் கீழ் சீனா பெரும் சாதனைகளை படைத்துள்ளது மற்றும் அவரது மீள் தெரிவு, சீன மக்களுக்கு அவரது தலைமையின் வலிமை மற்றும் தைரியத்தை உறுதிப்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு நன்றி தெரிவித்து, சீனத் தூதரகத்தினால் போடப்பட்டிருந்த ஒரு பதிவில், சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் நட்புறவையும் பரிமாற்றங்களையும் மேலும் வலுப்படுத்த எதிர்பார்க்கிறோம் என்று கூறப்பட்டிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ தன்னை ஒரு அரசாங்கத் தலைவராக சீனத் தலைவருக்கு காட்டிக் கொள்ள முற்பட்டிருப்பதை அவரது வாழ்த்துச் செய்தி சுட்டிக் காட்டுகின்ற அதேவேளை, சீனத் தூதரகத்தின் பதிவு, அவரை பொதுஜன பெரமுனவின் தலைவராகத் தான் அடையாளப்படுத்தியிருக்கிறது.

சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான உறவு பற்றி மாத்திரமே அதில் கூறப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துபவராக இருந்தாலும், சீனா அவரை அரசாங்கத்தின் பிரதிநிதியாக – தலைவராக அங்கீகரிக்கவில்லை என்பதையே அது வெளிப்படுத்துகிறது.

அதேவேளை, சீனாவுக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இருக்கின்ற நெருக்கத்தை இந்தப் பதிவுகள் வெளிப்படுத்தவும் தவறவில்லை. (20ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இந்தியக் குடைக்குள் இலங்கை?

ஜே.ஆரின் திட்டம், ரோஹண விஜேவீரவின் கனவை முடிவுக்கு கொண்டு வந்தது. ரணிலின் திட்டம், பிரபாகரனின் கனவை முடிவுக்கு கொண்டு வந்தது

எதிரிகளை நண்பர்களாக்கிக் கொள்வது, எதிரிகளை மோத விடுவது என்று ரணில் விக்கிரமசிங்க அரசியலில் காய்களை நகர்த்துவதில் சாமர்த்தியசாலி

இந்தியாவின் முதலீட்டுக்கு திருகோணமலையைத் திறந்து விடுவதன் மூலம், எல்லா வழிகளிலும் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளலாம் என்று கருதுகிறார் ரணில்

இலங்கையின் அரசியலில் குள்ளநரி என்று பெயரெடுத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு, அவரது அரசியல் வாரிசான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சற்றும் சளைத்தவரில்லை.

உள்நாட்டு அரசியலிலும், வெளிநாட்டு உறவுகளிலும், எதிரிகளை கோர்த்து விட்டு, மோத விடுவதில் இரண்டு பேரும் குறைந்தவர்களில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தின் இறுதிக் கட்டத்தில், அவருக்கு எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட, தலைவலியாக இருந்தது, விடுதலைப் புலிகளும், ஜே.வி.பியும் தான்.

அந்த இரண்டு நெருக்கடியையும் ஒரே நேரத்தில் எதிர் கொள்ளும் நிலை வந்த போது, இந்தியாவிடம் இருந்து கிடைத்த அழுத்தத்தை, சாதகமாக்கிக் கொள்ள முடிவு செய்தார்.

இந்தியாவுடன் சமாதான உடன்பாட்டைச் செய்து கொண்டு, விடுதலைப் புலிகளைக் கையாளுகின்ற பொறுப்பை இந்தியப் படைகளிடம் விட்டு விட்டு, ஜே.வி.பியை அடக்கும் பொறுப்பை தனது இராணுவத்திடம் ஒப்படைத்தார்.

அவர் அதனைச் செய்து முடிப்பதற்கிடையில், பதவிக்காலம் முடிந்து போனது. அதன் பின்னர் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த ஆர்.பிரேமதாச, விடுதலைப் புலிகளைப் பற்றிய கவலைகள் இன்றி, ஜே.வி.பியை ஒழிக்கும் வேலையை செய்து முடித்தார்.

விடுதலைப் புலிகளை ஒழிக்கும் வேலையை இந்தியாவிடம் ஜே.ஆர். ஒப்படைக்காமல் போயிருந்தால், ஒரே நேரத்தில் இரண்டு தரப்புகளையும் கையாள முடியாமல், இலங்கை இராணுவம் பாரிய தோல்வியை சந்தித்திருக்கும்.

ஜே.ஆரின் வழியில் வந்த ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறு தான், 2001இல் விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்பாட்டைச் செய்து கொண்டு, பேச்சுக்களை நடத்தியவாறு, அவர்களை சர்வதேச அளவில் நெருக்கடிக்குள்ளாக்கும் வேலையை அமெரிக்காவிடம் கொடுத்தார்.

அதேவேளை, கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்து, விடுதலைப் புலிகளை நெருக்கடிக்குள் தள்ளினார்.

இந்த இருமுனை அழுத்தங்கள் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தியிருந்த நிலையில் தான், அதையடுத்து ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவினால், வெற்றிகரமாக புலிகளை அழிக்க முடிந்தது.

ஜே.ஆரின் திட்டம், ரோஹண விஜேவீரவின் கனவை முடிவுக்கு கொண்டு வந்தது. ரணிலின் திட்டம், பிரபாகரனின் கனவை முடிவுக்கு கொண்டு வந்தது.

எதிரிகளை நண்பர்களாக்கிக் கொள்வது, எதிரிகளை மோத விடுவது என்று ரணில் விக்கிரமசிங்க அரசியலில் காய்களை நகர்த்துவதில் சாமர்த்தியசாலி.

இல்லாவிட்டால், ராஜபக்ஷவினரின் மீள் எழுச்சியுடன், சஜித் அணி பிரிந்து போக, வரலாறு காணாத தோல்வியைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியைத் தக்கவைத்துக் கொண்டே, பாராளுமன்றத்துக்குள் நுழைந்து, அவரால், ஜனாதிபதி பதவிக்கு சென்றிருக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்க போன்ற தந்திரசாலிகள் அவ்வப்போது அரசியலில் தங்களின் திறமையை நிரூபித்து வந்திருக்கிறார்கள்.

ராஜபக்ஷவினரின் மீள் எழுச்சி என்பது, மக்களால் உருவானது. ஆனால் ரணிலின் மீள் எழுச்சி முற்றிலும் அவரது தந்திரத்தால் தான் சாத்தியமானது.

அவர், 2015இல் ராஜபக்ஷவினரை ஓரம்



கட்டுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு வைத்துக் கொண்டார்.

அப்போது ராஜபக்ஷவினரை தள்ளி விழுத்தினாலும், அவர்கள், மீள எழுச்சி பெற்று ஆட்சியைக் கைப்பற்றினர். ஆனால் அதனை தக்க வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

அப்போது, ராஜபக்ஷவினருடன் கூட்டை ஏற்படுத்திக் கொண்டு உச்சப் பதவியை அடைந்திருக்கிறார் ரணில். இதன் மூலம் ரணிலின் நெடுங்கால ஜனாதிபதி கனவு நிறைவேறி விட்டது.

அடுத்து அவர், தன் சக அரசியல் எதிரியான சஜித்தை தோற்கடிப்பதற்கு, பொதுஜன பெரமுனவுடன் கூட்டு வைத்துக் கொள்ளவும் தயாராக இருக்கிறார். இந்த நிலையில், அண்மையில் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு ஒரு தூண்டிலைப் போட்டிருந்தார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை அப்போதே இந்தியாவுக்கு முழுமையாக வழங்கியிருந்தால், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்று அவர் கூறியிருக்கிறார்.

சீனக்குடாவில் உள்ள எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு 35 வருட குத்தகைக்கு கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க தான்.

அவரது ஆட்சிக்காலத்தில் கொடுக்கப்பட்ட அந்த எண்ணெய் தாங்கிகளை முழுமையாக லங்கா ஐஓசி நிறுவனம் பயன்படுத்துவதற்கு தொழிற்சங்கங்களும், எதிர்க்கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்தன.

தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு, நீதிமன்ற நடவடிக்கைகள், போன்ற காரணங்களால், சீனக்குடா எண்ணெய் தாங்கிகளை இந்தியா முழுமையாக அபிவிருத்தி செய்யும் நிலை இருக்கவில்லை என்பதை ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நரேந்திர மோடி இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் முதல்முறையாக இலங்கைக்கு வந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், திருகோணமலையை எரிபொருள் கேந்திரமாக மாற்றுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அந்த வாக்குறுதியை இந்தியா நிறைவேற்றவுமில்லை. இலங்கை அதனை நிறைவேற்ற விரும்பவுமில்லை.

ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிடம், எண்ணெய் தாங்கிகளை கொடுப்பதன் மூலம், ஒருவித பாதுகாப்பை தேட முனைகிறார்.

எண்ணெய் தாங்கிகளை இந்தியா முழுமையாக பயன்படுத்தியிருந்தால், நாட்டில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்காது என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறான சூழ்நிலையில், நாடு முழுவதற்கும் இந்தியாவே எரிபொருள் விநியோகத்தை மேற்கொண்டிருக்கும். அது நாட்டில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட இடமளித்திருக்காது.

அவ்வாறு பார்த்தால், ராஜபக்ஷவினர் மற்றும் அவர்களின் கூட்டாளிகளின் இந்திய எதிர்ப்பு, அவர்களுக்கே பாதகமாக அமைந்து விட்டதெனலாம்.

எரிபொருள் வரிசை தான், ராஜபக்ஷவினருக்கு எதிரான அரசியல் கிளர்ச்சியை தீவிரமாக்கி ஆட்சியை இழக்க காரணமாகியது.


இந்தியாவின் குடைக்குள் இருந்திருந்தால், அவர்களுக்கு அந்த நிலை ஏற்பட்டிருக்காது. ரணில் விக்கிரமசிங்க இப்போதும் கூட, இந்தியாவை கவசமாக மாற்றுவதற்கே முற்படுகிறார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன எவ்வாறு புலிகளுக்கு எதிராக இந்தியாவைத் திருப்பி விட்டு, அவர்களுடன் மோத விட்டாரோ, அது போலத் தான், கொழும்புக்கு வரக்கூடிய அச்சுறுத்தலை தடுத்து நிறுத்தும் பொறுப்பை அவர், இந்தியாவிடம் கொடுக்க நினைக்கிறார். அவ்வாறான சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடியோ, அரசியல் நெருக்கடியோ, பாதுகாப்பு நெருக்கடியோ கொழும்பு மைய அரசியலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

திருகோணமலை மீது இந்தியாவுக்கு இருக்கின்ற இயல்பான ஆர்வம், ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமான தாக உள்ளது.

எப்படியாவது இந்தியாவின் முதலீட்டுக்கு திருகோணமலையைத் திறந்து விடுவதன் மூலம், எல்லா வழிகளிலும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



பாதுகாப்பைத் தேடிக் கொள்ளலாம் என்று கருதுகிறார் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் இந்தியா அதற்குத் தயாராக இருக்க வேண்டும். ஏனென்றால், 1987இல், ஜே.ஆருடன் ராஜிவ் காந்தி கையெழுத்திட்ட அமைதி உடன்பாடு, இந்தியாவுக்கு பெரும் அவமானத்தையும், இழப்புக்களையும் ஏற்படுத்தியது. இந்தியாவின் பாதுகாப்பு திறனை கேள்விக்குட்படுத்துகின்ற நிலையை ஏற்படுத்தியது. அவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படுவதை இந்தியா நிச்சயமாக விரும்பாது.

அதேவேளை, இலங்கையில் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கு – ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கு கிடைக்கின்ற வாய்ப்புகளையும் இந்தியா முற்றுமுழுதாக புறந்தள்ளி விடாது. அம்பாந்தோட்டை துறை முகத்தை அமைக்கும் வாய்ப்பை தட்டிக் கழித்தது போன்ற தவறை இழைக்க இந்தியா தயாராக இருக்காது.

அவ்வாறாயின் இலங்கையில் இந்தியா தனது ஈடுபாட்டை எவ்வாறு தக்க வைத்துக் கொள்ளப் போகிறது என்ற கேள்வி வருகிறது.

இலங்கையில் இனி முதலீடுகளை மட்டும் மேற்கொள்ளவுள்ளதாக அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூறியிருந்தார்.

அந்த முதலீடுகள் திருகோணமலையை மையப்படுத்தியதாகவோ வேறு இடங்களை மையப்படுத்தியதாகவோ இருக்கலாம்.

அது சாத்தியமானால், இந்தியா தனது முதலீடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, எப்படியும், கொழும்பு அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை பாதுகாக்க முற்படும்.

அந்த உறுதிப்பாட்டுக்காக எந்த எல்லைக்கும் செல்வதற்கும் இந்தியா தயாராக இருக்கும். அந்த நிலையை ஏற்படுத்துவது தான் ரணிலின் இப்போதைய இலக்காக தெரிகிறது.

**Restaurant**

**வேலைக்கு ஆள் தேவை**

ஸ்காபரோவில் அமைந்துள்ள இலங்கை இந்திய உணவகத்திற்கு இலங்கை இந்திய உணவுகளை தயாரிக்கக் கூடிய அனுபவமுள்ளCook உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 647 545 2430

Cansintraders@gmail.com

# சட்டம் - ஒழுங்கு அரசியலை கையிலெடுக்கும் பா.ஜ.க?

தமிழக அரசியலில் ஏதேனும் ஒரு வகையினதான அரசியலை கையில் எடுத்து தங்களின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவும், தங்களுக்கான பிரத்யேக வாக்கு வங்கியை உருவாக்குவதற்காகவும் பா.ஜ.க., பின் விளைவுகளைப் பற்றி எந்த கவலையும் கொள்ளாமல், கடுமையான சட்ட ஒழுங்கு அரசியலில் ஈடுபட்டு வருகிறது.

ஆனால் அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு அவை பாரியத் தாக்கத்தை ஏற்படுத்தாமல், தொடக்க நிலையிலேயே புஸ்வானமாகி விடுகிறது. உதாரணமாக அண்மையில் கோவையில் நடைபெற்ற கார் வெடிப்பு சம்பவம், 'தீவிரவாத தற்கொலை தாக்குதல்' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிக்க வேண்டுமென பா.ஜ.க. வற்புறுத்துகிறது.

ஆனால் தமிழக அரசு, கோவையில் நடைபெற்றது எரிவாயு உருளை வெடிப்பு விபத்து என்றே விவரிக்கிறது. மேலும் இது தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை விசாரணை மேற்கொள்ள வேண்டுமெனவும் தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கிறது. இதன் காரணமாக பா.ஜ.க. திட்டமிட்டிருந்த சட்ட ஒழுங்கு அரசியல், திசைமாறி அவர்களையே தாக்கத் தொடங்கி இருக்கிறது. ஏனெனில் பயங்கரவாத தாக்குதல் என்பது தேசிய பிரச்சினையாகும்.

தமிழக ஆளுநரான ஆர்.என் ரவி, அவர் பங்கு பற்றும் ஒவ்வொரு அரசு நிகழ்விலும் தனியார் நிகழ்விலும், தமிழக அரசுக்கு எதிரான ஏதேனும் ஒரு கருத்தை பேசி வருகிறார். மற்றொருபுறம் தமிழகத்திற்கு மத்திய அமைச்சர்கள் தொடர்ச்சியாக வருகை தந்து, மத்திய அரசு மூலமாக பயன் பெற்ற நலத்திட்ட பயனாளிகளை நேரில் சந்தித்து, அவர்களைப் பற்றிய தரவுகளை சேகரித்து, பா.ஜ.க. ஆதரவு அரசியலை நடத்தி வருகிறார்கள்.

மறுபுறம் பா.ஜ.க.வின் தலைவர்கள், தொடர்ச்சியாக வெறுப்பு அரசியலை தங்களுடைய முதன்மையான பிரசார



உத்தியாக மேற் கொண்டு வருகிறார்கள். இதன் மூலம் தமிழகத்தில் வலிமையாக இருக்கும் சிறுபான்மையின மக்களிடத்தில் கோபத்தை ஏற்படுத்தி, அவர்களை அரசுக்கு எதிராக திசை திருப்பும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறார்கள்.

கோவை சம்பவத்திற்கும் பிறகு தமிழக பா.ஜ.க., மத துவேஷ அரசியலை பின்பற்றுவதுடன், சட்ட ஒழுங்கு அரசியலையும் கையில் எடுத்துக்கொண்டு அரசியல் ஆதாயம் தேடுவதில் மும்முரமாக செயல்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக தமிழக அரசு கடைப் பிடிக்கும் நிதானப்போக்கு மற்றும் விவேகமான அணுகுமுறை சரியானதாக இருப்பதால், அரசுக்கு எதிராக மக்களிடம் அதிருப்தி எழவில்லை.

மேலும் இவ்விடயத்தில் தமிழக முதல்வர் கருத்து தெரிவிக்க வேண்டும் அல்லது விளக்கம் அளிக்க வேண்டுமென தமிழக பா.ஜ.க. இயல்பான அளவை விட கூடுதலாக அழுத்தம் அளித்து வருகிறது. ஆனால் தமிழகத்தை சேர்ந்த வேறு அரசியல் கட்சிகள்,



தேசிய அளவில் நடைபெற்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி மௌனமாக இருந்திருப்பதை சுட்டிக்காட்டி, தமிழக பா.ஜ.க.வினருக்கு பதிலடி அளித்து வருகிறார்கள்.

அதேநேரம், பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். சம்பந்தப்பட்டவர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் மீது தமிழக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை ஆதாரத்துடன் குறிப்பிட முடியும்.

உதாரணத்திற்கு பத்ம சேஷாத்திரி எனும் தனியார் பாடசாலையில் பயின்ற மாணவியிடம் பாலியல் ரீதியாக துன்புறுத்தலில் ஈடுபட்ட ஆசிரியரை தண்டிக்கவில்லை. நீதிமன்ற தீர்ப்பு கிடைத்த பிறகும் தஞ்சையில் சாஸ்திரா பல்கலைக் கழகம் ஆக்கிரமிப்பு செய்திருந்த நிலங்களை மீட்கவில்லை. இணையதளம் மூலமாக ஆலய நிர்மாணத்திற்காக வசூல் செய்த கார்த்திக் கோபிநாத், கள்ளக்குறிச்சி தனியார் பாடசாலை மாணவியின் மரணத்திற்கு உரிய நீதியை வழங்க முடியவில்லை. இப்படி பல விடயங்களை பட்டியலிட்டு கொண்டே செல்லலாம். இதன் மூலம் தமிழகத்தில் பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் திட்டமிட்டு சட்ட ஒழுங்கு அரசியலிலும், வெறுப்பு அரசியலிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை அப்பட்டமாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறிருக்கையில் அண்மையில் இந்திய உச்ச நீதிமன்றம், டெல்லி, உத்தரகாண்ட் மற்றும் உத்திர பிரதேச மாநிலங்களின் காவல்துறை ஆணையர்களுக்கு, வெறுப்பு அரசியல் மற்றும் வெறுப்பு பிரசாரத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. இது தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறது.

கோவை சம்பவத்தை பொறுத்தவரை, அதனை எவரும் விரும்பவில்லை. ஏனெனில் 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி கோவையில் 11 இடங்களில் தொடர் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 58அப்பாவி பொதுமக்கள் பலியானார்கள். 200க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். தமிழகத்தில் இதுவரை நடைபெற்ற மிகப் பெரிய பயங்கரவாத தாக்குதல் அது தான்.

இந்நிலையில் ஜனநாயக அரசியலை விரும்பும் அரசியல் நோக்கர்கள், பயங்கரவாதத்திற்கு ஜாதி மதம் கிடையாது. பயங்கரவாதிகள் யாராக இருந்தாலும் அவர்களின் நல்லவர் கெட்டவர் கிடையாது. கோவையில் நடைபெற்ற சம்பவம் பயங்கரவாத தாக்குதலின் நவீன வடிவமாக இருந்தால், அதனை தமிழக முதல்வர் பரிந்துரைத்திருக்கும் தேசிய புலனாய்வு முகமை தீர விசாரித்து அதற்குரிய தண்டனையை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்கள்.

அதே தருணத்தில் தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் நேர்மையாக விசாரணை நடத்தி, அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் குற்றவாளிகளென நீதியரசர் அருணா ஜெகதீசன் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இவர்கள் மீது இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை.

அதேபோல் ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரித்த நீதியரசர் ஆறுமுகசாமி ஆணைய அறிக்கையின் படியும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை இதுவரை நடைபெறவில்லை. இவர்கள் அனைவரும் மறைமுகமாக பா.ஜ.க.வின் ஆதரவுடன் தமிழக அரசியலில் இருப்பவர்கள். இதனால் தமிழக அரசு, பா.ஜ.க. மீது தொடர்ந்து மென்மையான அணுகு

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

முறையே பின்பற்றி வருகிறது என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமோ என்ற ஐயம் எழுந்திருக்கிறது.

இவ்விடயத்தில் வலிமையான எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டிய அ.தி.மு.க., உட்கட்சி பூசலால் நான்காக பிரிந்து கிடக்கிறது. அ.தி.மு.க.வின் உட்கட்சி பூசலுக்கு பா.ஜ.க. தான் மூலகாரணம் என்றாலும், அக்கட்சியின் தலைவர்கள் யாரும் பா.ஜ.க.வை தீரமாக எதிர்த்து அரசியல் செய்வதில்லை,

இதுதான் புரியாத புதிராக நீடிக்கிறது. இந்த புதிர்புரியாமல் தான் தி.மு.க.வும், எம்மாதிரியான எதிர்வினையை ஆற்றுவது என தெரியாமல் தவிக்கின்றது.

மக்கள் தொகை பெருக்கத்தால் மக்கள் பொது இடங்களில் கூடுவது அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக சட்டம் ஒழுங்கைச் சீராக பாதுகாத்து பேணுவது என்பது சவாலான விடயமாக மாறிவிட்டது. அதிலும் பா.ஜ.க. போன்ற அரசியல் கட்சிகள், தொடர்ச்சியாக வெறுப்பு அரசியலில் ஈடுபட்டு வருவதால் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி வருகிறது. எனவே தமிழக அரசு இது தொடர்பாக விரிவான ஆலோசனையை நடத்துவதுடன், உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். தமிழகத்தில் 'திராவிட முறைமை' அரசு நடைபெறுகிறது என்பது உறுதியானால், கோவை சம்பவம் போன்ற விடயங்களில் வித்தியாசமான மற்றும் விரும்பக்கூடிய நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைத்து தரப்பினரிடமும் ஏற்பட்டிருக்கிறது.

# பாடம் கற்ற சீனாவும்..

(18ம் பக்கத் தொடர்ச்சி) நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், பொதுஜன பெரமுனவைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் நடந்து கொண்டிருந்த போது சீனா அதற்கு உதவுவதாக குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. ஆனால் அப்போது, சீனா அதனை மறுத்தது,

தாங்கள் அரசாங்கங்களுடன் தான் தொடர்புகளை பேணுவதாகவும், அரசியல் கட்சிகளுடன் அல்ல என்றும் சீனத் தூதரகம் முன்னர் விளக்கம் அளித்திருந்தது. ஆனால், பொதுஜன பெரமுனவுடன் சீனாவுக்கு மிக நெருங்கிய நட்புறவு பேணப்படுகிறது. அத்துடன் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் அது உறவுகளை பேண முனைகிறது என்பது அண்மைக்கால நிகழ்வுகளில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

ஏனென்றால் சீனாவுக்கு இப்போது கட்சிகளைக் கடந்த வெளியுறவுக் கொள்கை முக்கியமானதாக தேவைப்படுகிறது. தன்னை வலுப்படுத்திக் கொள்வதற்கு அதற்கு அது முக்கியமான தேவையாக உள்ளது.

இலங்கை போன்ற நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்த போது, இடம்பெற்ற எதிர்வினைகள் சீனாவுக்கு பாடத்தை புகட்டியிருக்கிறது.ஆனால் மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை.

அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்டாலும் அவர் மீண்டும் மீண்டும் அதனை அடைவதிலேயே குறியாக இருக்கிறார்.

# புதிய பிரதமரும் மகாராணியும் இலங்கை இனப்பிரச்சனையும்

ரிஷி சுனக் உலக ஏகாதிபத்திய சக்தியாக திகழ்ந்த பிரித்தானியாவின் முதல் இந்து பிரதமர். இதுவரை வெள்ளை இனத்தவர்களே இவ்வுயர் பதவியை வகித்த நிலையில் இவரின் தெரிவானது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. இலங்கை இனப்பிரச்சினை நன்கறிந்தவர். இதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பார் என்று தமிழ்த்தேசியவாதிகள் கூறுகின்றனர்.சிலர் கடிதமும் எழுதியுள்ளனர்.

மறைந்த எலிசபெத் மகாராணியை சிலர் சமாதானப் புறா என்கின்றனர். மத்திய கிழக்கில் கொடுங்கோல் ஆட்சிகளுக்கு அவர் உதவியதையும் முன்னர் ஆட்சி புரிந்த மன்னர்களின் கொடுமைகளையும் உலகறியும்.கத்தோலிக்கர் புரட்டஸ்தாந்து மோதல்கள் கத்தோலிக்கம் பிரிந்து அங்கிலிக்கன் (ஆங்கில திருச்சபை) உருவாகவும் அவர்களே காரணம்.

எலிசபெத் ராணியியின் காலம் இனப்பிரச்சினை தீர்கப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (செப் 23) பாராளுமன்ற அஞ்சலி உரையில் கூறினார். பொது நலவாய நாடுகளின் தலைவி இலங்கையின் இப்பிரச்சினை இனவன்முறைகள் யுத்தத்தை நன்கு அறிந்தவர் தீர்த்திருக்காலம்.

மகாராணி 1954 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் முதன் முதலாக இலங்கைக்கு வந்தபோது தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதே இனப்பிரச்சினை ஆரம்பமானது. பொது நலவாய நாடுகள் (கொமன்வெல்த்) 1956,1958, 1977,1983 இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை ஏன் தடுக்கவில்லை.

1957 லண்டன் கொமன்வெலத் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட வட்டுக்கோட்டை எம்.பி அ.அமிர்தலிங்கம் இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்து காவலூர் வ.நவரத்தினம் எழுதிய **CEYLON FACES CRISIS** ஆங்கில நூலின் பிரதிகளை பிரதிநிதிகளிடம் வழங்கி இனப்பிரச்சினையை தீர்க்குமாறும் கோரியிருந்தார். மகாராணியும் அறிந்திருப்பார்.

1961 மார்ச் 7 முதல் 17 வரை லண்டன் கொமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் பிரதமர் சிறிமாவோ தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிரான சம்பவங்களை எழுப்பிய போது 'உங்கள் நாட்டில் சிறுபான்மை தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி தீர்க்குமாறு தென்னாபிரிக்க பிரதமர் டாக்டர் வேர்வோட் சிறிமாவுக்கு பதிலடி கொடுத்தார்.

இது லண்டன் பத்திரிகைகளில் பிரதான செய்தி. சிறிமாவுக்கு எதிராக தமிழர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது வடக்கு கிழக்கில் சிங்களத்தை திணிப்பதை எதிர்த்து தமிழரசின் சத்தியாக்கிரகம் இடம் பெற்றது .இவற்றையும் மகாராணி அறிந்தவர்

வடக்கு கிழக்கு யுத்தம் இலங்கை இராணுவத்துக்கு பிரித்தானிய **Keenie Meenie Services (KMS Ltd)** தனியார் இராணுவ சேவை விசேட அதிரடிப் படைக்கு உதவியது. பிரித்தானிய விமானிகள் யுத்தத்தில் உதவினர். 1980 களில் பிரித்தானியாவிடம் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆயுதங்களை கேட்டிருந்தார். இதுவும் மகாராணிக்கு தெரிந்ததே.

1972 மே 22 இலங்கை குடியரசானதும் மகாராணியின் ஆட்சிமுறையும் அவரின் பிரதிநிதியான மகா தேசாதிபதியின் (**Governor General**) அதிகாரங்களும் நீக்கப்பட்டன.அதுவரை தேசாதிபதியிடம் பல அதிகாரங்களும் இருந்தன. அவரே முப்படை தளபதி.

இலங்கை வழக்குகளின் தீர்ப்புக்களுக்கு எதிராக பிரித்தானிய மேன் முறையீடு (பிரிவி கவுன்சில்-**Privy Council)** செய்யப்பட்டது குடியரசானதும் நிறுத்தப்பட்டது. சிறந்த சட்டத்தரணிகளுக்கு 6 ஆம் ஜோர்ஜ் மன்னர் ஆட்சியில் (7) பட்டம் வழங்கப்பட்டது. அவரது மறைவுக்கு பின்பு ராணி சட்டத்தரணி (**Queen's Councel**) பட்டம். குடியரசானதும் (**President's Councel**) ஜனாதிபதி சட்டத்தரணியாக மாறியது.

1962 ஜனவரி 27 பிரதமர் சிறிமாவோ ஆட்சியை கவிழ்க்க முயன்ற சதிப் புரட்சியில் 24 இராணுவ கடற்படை பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் முதலாவது குற்றச்சாட்டு மகாராணிக்கு எதிராக சதி செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சதியுடன் தொடர்புபட்டதாக மகாராணியின் பிரதிநிதியான மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலக்க மீது சட்ட நடவடிக்கை எடுக்காது





தடுத்து லண்டன் சென்று வாழுவதற்கு மகாராணியாரே உதவியிருந்தார் என்று சுதந்திரக்கட்சியினர் கூறினார்கள்.

எலிசபெத் மகாராணி முதன் முதலாக 1954 ஏப்ரல் 10 இலங்கைக்கு வந்த போது ஏப்ரல் 12 சுதந்திர சதுக்கத்தில் பாராளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்திய பின்பு நன்றி உரையை

ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் உணவு விவசாய அமைச்சர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆற்றினார்.

வரலாற்று முக்கியத்துவ இந்நிகழ்வில் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்காமை இனப்பிரச்சினைக்கு வித்திட்டது. வவுனியா எம்.பி. பேராசிரியர் செ.சுந்தரலிங்கம் இதனைக் கண்டித்தார்.

அரசில் தமிழ் எம்.பிக்கள் அமைச்சர்கள் இருந்தும் தமிழ் புறக்கணிக்கப்பட்டதாக பிரதமர் கொத்தலாவலை மீது குற்றம் சுமத்தினார். கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் பதவியில் இருந்து விலகியிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலமும் கண்டித்தார்.

பிரதமர் கொத்தலாவல 1954 இல் யாழ்ப்பாணம் வந்த போது யாழ். மாநகர சபை நகர மண்டபத்தில் மேயர் சி.பொன்னம்பலம் தலைமையில் அமோக வரவேற்பளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு பிரதமர் மேடையில் ஏறியதும் மக்களுடன் கலந்து நின்ற அ. அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழரசுக்கட்சி இளைஞர்கள் சுமார் 200 பேர் திடீரென தமது பொக்கற்றுக்குள் மறைத்து வைத்திருந்த கறுப்பு துணிகளை தூக்கி காட்டி ' கொத்தலாவல திரும்பி போ! என்று ஆங்கிலத்தில் கத்தினார்கள்.

தமிழர்களின் போராட்ட வரலாற்றில் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியின் முதலாவது நேரடி நடவடிக்கை.பிரதமர் அதிர்ச்சியடைந்தார். பொலிசார் குண்டாந்தடி பிரயோகம் செய்ததில் அமிர்தலிங்கமும் இளைஞர்களும் படுகாயமடைந்தனர். அப்போது அமிர்தலிங்கம் எம்.பியாக தெரிவாகவில்லை. இளம் சட்டத்தரணி.

எலிசபெத் மகாராணியின் வரவேற்பில் தமிழுக்கு உரிய இடமளிக்காது புறக்கணிக்கப்பட்டதால் பிரதமருக்கு தமிழர்கள் எதிர்ப்பை தெரிவிப்பதாக கூறப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இளைஞர் காங்கிரஸ் ஹண்டி பேரின்பநாயகம் தலைமையில் பிரதமருக்கு வரவேற்பளித்த போது சிங்களம் தமிழ் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என பிரதமர் உறுதியளித்தார் பலத்த கரகோசம்.இனி இனப்பிரச்சினையே நாட்டில் இல்லை என தமிழர்கள் பிரதமரில் நம்பிக்கை கொண்டனர்.

தமிழர்களின் ஆதரவை, வாக்குகளை நாடு முழுவதும் ஐக்கிய தேசிக்கட்சி எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளவும் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்களை தமது பக்கம் இழுக்கவுமே பிரதமர் இப்படி கூறியதாகவும் இது சாத்தியப்படாது என அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் பிரதமர் கூறிய சம அந்தஸ்து விவகாரம் அவர் கொழும்பு திரும்புவதற்கு முன்பே தெற்கில் பெரும் சர்ச்சையை தோற்றுவித்தது.

ஆனந்தா கல்லூரியின் அதிபர் எல்.எச். மேதானந்த சிங்களவர் இனிமேல் தமிழை படிக்கவேண்டும் என பிரதமர் வடக்கில் கூறியுள்ளார் என்று சிங்கள மக்களிடையே இனவாதமாக பிரசாரம் செய்தார்.



1956 ஜீன் 5 தனிச்சிங்கள சட்டத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சியினர் பாராளுமன்றத்தின் முன்பாக சத்தியாக்கிரகம் இருந்த போது வடக்கின் உணவுப் பொருட்களை, தமிழ் சட்டத்தரணிகளை தமிழ் மருத்துவர்களை பகிஷ்கரிக்குமாறும் கோரியவரே இந்த மேதானந்தா. இவரின் ஆதரவாளர்களும் அன்று தமிழர்களை தாக்கினார்கள்.

பிரதமர் தனது தொடங்கஸ்லந்தை தொகுதிக்கு சென்ற போது வீதியில் நின்ற பௌத்த பிக்குமார் தமிழுக்கு சம அந்தஸ்தா நாம் தமிழ் கற்க வேண்டுமா எனக்கோசமிட்டு அவருக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

கொத்தலாவல வீதியில் வைத்தே துணிந்து பிக்குமாரை கண்டித்தார்.

பௌத்த மத விடயங்களை உங்கள் பணி! அரசியல் விடயங்களில் தலையிடாதீர்கள்! என்று பதிலளித்தார்.

இச்சம்பவங்களை ஆராய்ந்த எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.டபிள்யூ .ஆர்.டி. பண்டாராநாயக்க பதவிக்கு வருவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிப்பதற்கும் இனவாதத்தை துரும்புச் சீட்டாக பயன்படுத்த தீர்மானித்தே தான் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் ஆங்கிலத்துக்கு பதிலாக சிங்களத்தை அரச மொழியாக்குவேன் என்று எங்கும் பிரசாரம் செய்தார்.

இது தெற்கில் காட்டுத்தீயாக பரவியது. பௌத்த குருமார் நாட்டுப்புற மக்கள் பண்டாரநாயக்கவே சிங்கள இனத்தின் இரட்சகரும் பாதுகாவலனும் என நம்பினார்கள். அவருக்கு ஆதரவளித்தனர்.

பண்டாரநாயக்காவின் உரைகளை கேட்டு அவர் பின்னால் திரளும் மக்களை கண்ட பிரதமர் கொத்தலாவலயும், ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்களும் இரு மொழி சம அந்தஸ்து கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். கொத்தலாவலைக்கு கட்சிக்குள் எதிர்ப்பும் கிளம்பியது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே இதனை கிளப்பினார்.

1956 பெப்ரவரி 7 களனியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் கொத்தலாவல யாழ்ப்பாணத்தில் கூறியிருந்த இரு மொழிகள் சம அந்தஸ்து கொள்கையை கைவிடுவதாகவும் தனிச் சிங்களமே தமது கொள்கை என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் ஐக்கியத்துக்கும், தேசியத்துக்கும் விடை கொடுத்தனர்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான அல்பிறட் தம்பிஜயா (ஊர்காவற்றுறை) எஸ்.எம்.இராசமாணிக்கம் (பட்டிருப்பு), வீ.நல்லையா (கல்குடா), சி.சிற்றம்பலம் (மன்னார்) மற்றும் சுப்பையா நடேசபிள்ளை (காங்கேசன்துறை) அருணாசலம் மகாதேவா உட்பட அக்




கட்சியின் தமிழ் பிரமுகர்கள் தனிச் சிங்கள தீர்மானம் திறைவேறியதும் மாநாட்டை விட்டு வெளியேறினார்கள்.


எஸ்.எம்.இராசமாணிக்கம் தமிழரசுக் கட்சியில் இணைந்தார்.சு.நடேசபிள்ளை தமிழரசு தலைவர் செல்வநாயகத்திடம் தோற்றார்.

1956 தேர்தலில் தமிழரசுக்கட்சி பல இடங்களில் வெற்றி பெற்றது. பண்டாரநாயக்காவும் 1956 ஏப்ரல் தேர்தலில் பதவிக்கு வந்து தனிச்சிங்கள மொழியை அரச கரும மொழியாக சட்டமாக்கினார். அன்றிலிருந்து இனப் பிரச்சினை ஆரம்பமாகி இன்று வரை தொடர்கிறது. நன்றி- வீரகேசரி


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். நீண்ட நாட்களாக தடைபட்டு வந்த காரியத்தை மீண்டும் செய்து முடிக்க முயற்சிகள் மேற் கொள் வீர்கள். கடித போக்குவரத்து சாதகமான பலன் தரும். வெளியூர் தகவல்கள் சாதக மானதாக இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகள் வேகமாக நடை பெறும். தடைகள் அகலும். உத்தியோகத் தில் இருப்பவர்கள் கூடுதலாக அலைய வேண்டி இருக்கும்.



ரிஷபராசி அன்பர்களே! தனாதி பதி புதனால் பணவரத்து இரு க்கும். எதிர்ப்புகள் விலகும். தடைபட்ட காரியங்களை மீண் டும் செய்து முடிக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டா கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்திலஇருந்த பிரச்னைகள் நீங்கும்.




மதுனராசி அன்பர்களே! சகோ தரர்கள் வகையில் ஏதாவது மனத்தாங்கல் ஏற்பட்டு மறை யும். பூமி தொடர்பான பிரசச னைகள் இழுபறியான நிலை காணப்படும். வழக்குகளில் சுணக்கம் இரு க்கும். தொழில் வியாபாரத்தில் சற்று மந்த மான நிலை காணப்படும். வரவேண்டிய பணம் கைக்கு கிடைக்க தாமதமாகலாம். போட்டிகளை சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலை ச்சலை சந்திக்க நேரிடும்.



கடகராசி அன்பர்களே! உடல் ஆரோக்கியம் மேம்படும். பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோ தரர்களுடன் இருந்த மனவருத்த ங்கள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். பணவரத்து தடைப் பட்டாலும் வந்து சேரும். வியாபார பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படை க்கும் போது கவனம் தேவை. உத்யோக ஸ்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவன மாக செய்வது நல்லது.



சிம்மராசி அன்பர்களே! கோப மான பேச்சு, டென்ஷன் குறை யும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிக ரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. வழக்கு களில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்ப வர்கள் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்கப் பெறுவார்கள். லாபம் கூடும்.



கன்னிராசி அன்பர்களே! திடீர் கோபம் உண்டானாலும் சமா ளித்து விடுவீர்கள். எடுத்த காரி யம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப் பது அவசியம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வீண் அலை ச்சல் வாடிக்கையாளர்களுடன் வாக்கு வாதம் போன்றவை உண்டாகலாம். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரி களின் கெடுபிடிகள் இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! மன தில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சி கள் சாதகமான பலன் தரும். வயிறு சம்பந்தப்பட்ட நோய் வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங் களை திட்டமிட்டு செய்வது நல்ல பலன் தரும். வாடிக்கையாளர்கள் பற்றிய வீண் கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத் தில் இருப்பவர்களுக்கு பணவரத்து திருப்தி தரும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். புத்தி சாதுர்யத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.




விருச்சிகராசி அன்பர்களே! கொடு த்த வாக்கை காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். பண வரவு திருப்தி தரும். காரியங்களில் இரு ந்த தடைகள் நீங்கும். தொழில் வியா பாரத்தில் முன்பு இருந்ததை விட முன்னே ற்றம் காணப்படும். உத்யோகஸ்தர்கள் தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லா வற்றையும் திறம்பட செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவார்கள். மேலிட த்தின் கரிசன பார்வை உங்கள் மீது விழும்.







தனுசுராசி அன்பர்களே! மற்ற வர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். வீண் பிரச்னைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது. சுணங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். தொழில் வியாபாரம் தொடர்பான மனக் கவலை தோன்றி மறையும். லாபம் கிடை க்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இரு ப்பவர்கள் எதிலும் நிதானமாக செயல்படு வதும், மற்றவர்களை அனுசரித்து போவ தும் நல்லது.



மகரராசி அன்பர்களே! மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நல்லது எது கெட்டது எது என்று பிரித்து பார்த்து செயல் படுவீர்கள். தொழில் வியாபாரம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் காண வாய்ப்புகள் வந்து சேரும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம். நண்பர்களால் திடீர் செலவு ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து, அதன் மூலம் நன்மதிப்பை பெறுவீர்கள்.



கும்பராசி அன்பர்களே! எதிர் பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும். எடுக்கும் முயற்சி களில் வெற்றி கிடைக்கும். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் எதிர்பார்த்ததை விட சற்று நிதானமாகவே நடக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்ற நிலை காண்பார்கள். மனதில் இருந்த குழப் பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும். குடும்ப த்தில் கலகலப்பு காணப்படும்.



மீனராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடச் செய்யும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். எதிர்ப்புகள் விலகும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர் கள் பேச்சின் இனிமை, புத்தி சாலித்தனம் இவற்றால் முன்னேற்றம் பெறுவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பேச்சினால் மேலதிகாரிகளை கவர்ந்து விடு வார்கள். குடும்பத்தில் இருந்த இறுக்கம் நீங்கி மனம் மகிழ்ச்சியடையும் விதமாக சம்பவங்கள் நடக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழரசுக்கட்சி மட்டுமா தவறிழைத்தது?

(17ம் பக்கத் தொடர்ச்சி) பெருக்குச் சக்தியாக செயற்பட்டிருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் தமிழரசுக் கட்சி உள்பட அனைத்துக் கட்சிகளும் துயர் பெருக்குச் சக்திகளாகவெ உள்ளது தெரியவரும். இவை பிரச்சினைகளைக் குறைப்பதை விட பிரச்சினைகளைப் பெருக்கும் தரப்பாகவே உள்ளன.

இதனால் தான் மக்கள் தொடர்ந்தும் பாதிப்பைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. தலைவர்கள் பேரோடும் புகழோடும் வாழ முடிகிறது. என்பதால் மக்களுக்காகக் கட்சியா? கட்சிக்காக மக்களா? என்ற இலகுவான கேள்வியை எழுப்பி அந்தத் தமிழரசுக் கட்சி உறுப்பினரைப் பின்வாங்க வைத்தேன். இவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் சில —

1.விடுதலைப்புலிகள் கூட்டமைப்பை உருவாக்கி, பெண் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்த முன்பு, தமிழரசுக் கட்சி பெண் உறுப்பினர்கள் எவருக்கேனும் பாராளு மன்றப் பிரதிநிதித்துவ வாய்ப்பை வழங்கியிருக்கிறதா?

2. 70 ஆண்டுகால தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இப்பொழுது கூடப் பெண்கள் தலைமைப் பொறுப்புக்கு வரக்கூடிய சாத்தியமுண்டா?

3 சாதி ரீதியாகப் பிளவுண்டிருக்கும் சமூகத்தில் சாதிய அணுகுமுறையைப் பரா மரித்துக் கொண்டே தமிழரசுக் கட்சி செயற்படுகிறது. இதை ஒழிக்க வேண்டும். அனைவருக்கும் சமநீதி வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் சமூக நீதியுடன் சமத்துவமாகச் செயற்படுவதற்கு அது தயாரா?

4. வடக்குக் கிழக்கில் பெருவாரியான மலையக மக்கள் வாழ்கின்றனர். அவர்களு க்கான மரியாதையை, அந்தஸ்தை அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தமிழரசுக் கட்சி வழங்கியுள்ளதா?

5.இனவாத அரசியலை முறியடிப்பதற்கான தமிழரசுக் கட்சியின் மூலோபாயம் என்ன? தந்திரோபாயம் என்ன?

6.பிராந்திய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் தமிழரசுக் கட்சி கொண்டிருக்கும் அரசியல், ராசதந்திர உறவுகள் எத்தகையன?

7.ஜனநாயகம் பற்றிய தமிழரசுக் கட்சியுனுடைய புரிதல் என்ன? அதனுடைய ஜன நாயக நிலைப்பாடு எத்தகையது? மெய்யாகவே அது ஜனநாயக உறுதிப்பாட்டில் இருக்குமானால் கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளுடன் ஜனநாயக ரீதியாக ஏன் அணுகமுடியவில்லை?

8. அந்த ஜனநாயக அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியற்கட்சி யாகப் பதிவு செய்யாமல் இருப்பது ஏன்?

இப்படிப் பல கேள்விகள். அவரோ பதிலளிக்காமல், நீங்கள் எப்பவும் இப்படித் தான். தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைக்கப் பார்ப்பீர்கள் என்று ஒற்றைச் சொல்லில் குற்றம் சாட்டினார். இந்தக் கேவலத்தை என்னவென்று சொல்வது?

ஒரு சிறந்த அரசியல் சக்தி எனப்படுவது மக்களுடைய வரலாற்றில் பன்முகத் தன்மையான பெறுமதிகளைச் சேர்க்க வேண்டும். ஜனநாயக ரீதியாக, உரிமைகள் வழியாக, பண்பாட்டு ரீதியாக, பொருளாதார மேம்பாட்டின் மூலமாக, அறிவியல், அறிவியல் ரீதியாக என இந்தப் பெறுமதிகள் அமைய வேண்டும். தமிழ்க் கட்சிகள் எதனிடத்திலும் இத்தகைய அடிப்படைகள் ஏதுமுண்டா? என்பதால் தான் தமிழ் மக்களின் அரசியலும் வாழ்க்கையும் ஒரு அடி கூட முன்னே நகர முடியாமல், பல இடிகள் பின்னே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைக்குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும். மக்களுடைய சிந்தனையே மக்களுக்கான விடுதலையைத் தரும். அதுவே மாற்றத்துக்கான வழிக்கு ஒளியூட்டும்.

# பொதுமன்னிப்பின் மறுபக்கம்:-

(7ம் பக்கத் தொடர்ச்சி) காரணமாக இருக்கின்றது. பாரிய பொருளாதார நெருக் கடிகள் சிக்கி உள்ள அரசாங்கம், அதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச உதவிகளை தான் பெரும் அளவுக்கு எதிர்பார்த்து இருக்கின்றது. சர்வதேச உதவிகளை எதிர்பார்க்கும் நிலைமையில் உள்நாட்டில் அமைதியான ஒரு நிலை இருக்கிறது என்பதையும், ஸ்திரமான அரசாங்கம் ஒன்று ஆட்சியில் உள்ளது என்பதையும் வெளிப்படுத்த வேண்டிய தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது. இந்தப் பின்னணியில் தான் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பு" என்ற பெயரில் விடுதலை செய்வதற்கான தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தது.

இருந்த போதிலும் இதனை ஒரு அரசியல் தீர்மானமாக எடுத்து சிறையில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் அரசாங்க விடுதலை செய்திருக்க முடியும். ஆனால் அவ்வாறான ஒரு தீர்மானத்தை அரசாங்கம் எடுக்கவில்லை. தற்போதைய நிலைமையில் இன்னும் 35 அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அரசியல் தீர்மானம் ஒன்று எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் அரசாங்கம் விடுவித்திருக்க முடியும். ஆனால் அது சிங்கள கடும் போக்காளர் மத்தியில் ஏற்படுத்தக் கூடிய எதிர்ப்புகளை கருத்தில் கொண்டு தான் அவ்வாறான ஒரு தீர்மானத்தை அரசாங்கம் எடுக்கவில்லை.

இப்போது இங்கு இருக்கிற கைதிகளில் சிலரை பொங்கல் தினத்தில் விடுதலை செய்வதாக ஜனாதிபதி உறுதியளித்திருக்கின்றார். ஆனால் இதன் போது கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பது உறுதியானது அல்ல. ஒரே தடவையில் அவர்களை விடுதலை செய்யாமல் கட்டம் கட்டமாக விடுதலை செய்வதுதான் அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கின்றது போல் தெரிகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட தமிழ் மக்களுடைய உரிமைகளுக்காக பேசும் எந்த ஒரு கட்சியும் இந்த அரசியல் கைதிகளில் விடுதலை தொடர்பில் ஆக்க பூர்வமான செயல்பாடுகளின் முன்னெடுக்கவில்லை. போர் முடிவடைந்த பின்னரும் அவர்கள் தொடர்ந்தும் சிறைகளில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தமைக்கு அதுவும் ஒரு காரணம். தற்போதைய நிலையில் அரசாங்கம் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் ஒரே அடியாக விடுதலை செய்வதற்கான அழுத்தத்தை தமிழ் கட்சிகள் கொடுக்க முடியும். இருந்த போதிலும் தலைமைத்துவ போட்டிகளாலும் உள்கட்சி அரசியலிலும் மூழ்கி போயிருக்கும் தமிழ் கட்சிகள் இந்த விடயம் தொடர்பில் புதிய அக்கறை செலுத்தவில்லை என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதாக ஜெனிவாவில் வாக்குறுதி அளித்த அரசாங்கம் அது தொடர்பில் ஆக்கபூ ர்வமான செயற்பாடுகள் எதனையும் இது வரை முன் வைக்கவில்லை. அது வெற்று வாக்குறுதியாக மட்டுமே இருக்கின்றது. இது தொடர்பில் தமிழ் தேசியக் கட்சிகளும் போதிய அவதானம் செலுத்தாமல் இருப்பது தமிழ் மக்களை விசனம் கொள்ள வைக்கின்றது.

# Awards Gala Night

## Music, Dance & Dinner



TAMIL MIRROR AWARDS 2022

**17TH Year Anniversary**
**Celebrations & Awards Gala -2022**

Guest Speaker Sri. A. Kaliyamurthy
Former Superintendent of Police.,Tiruchirapalli District.

- உலக அளவில் பேச்சுலகில் யாருமே இதுவரை சாதித்திராத உலக சாதனையை 2018 ஆண்டு நிகழ்த்திக் காட்டியவர்.
- 100 நாட்களில் 70 வேறுபட்ட இடங்களில், 70 மாறுபட்ட தலைப்புகளில் 1000 பேருக்கும் மேலானவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் முக்கிய விருந்தினராக கலந்து கொண்டு எல்லாக் கூட்டங்களிலும் 1 மணி நேரத்திற்கு குறையாமல் தொடர்ந்து பேசியவர்.

CHINESE CULTURAL CENTRE, 5183 SHEPPARD AVE.E. SCARBOROUGH.

INFO: 416 697 0126

**NOV 06 SUNDAY 4PM**

தமிழ் மிரர் Tamil Mirror
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய
கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.